பள்ளி இடைவிலகல்

(SCHOOL DROP-OUT)

செ. சுப்பிரமணியன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் — 613 005

பள்ளி இடைவிலகல்

(SCHOOL DROP-OUT)

ஆசிரியர்

முனைவர் செ. சுப்பிரமணியன்

உதவி இயக்குநர் மற்றும் இணைப்பேராசிரியர்

ஈடாளர் (வயது வந்தோர்) கல்வித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

ISBN : 81 - 7090 - 264 - 9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 204

திருவள்ளுவர் ஆண்டு 2029 மாசி, மார்ச்சு 1998

நூல்	:	பள்ளி இடைவிலகல்
ஆசிரியர்	:	முனைவர் செ. சுப்பிரமணியன்
விலை	:	ரூ. 30/-
பதிப்பு	:	முதற்பதிப்பு
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம் தஞ்சாவூர்

முனைவர் கி. கருணாகரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 005

அணிந்துரை

நம் நாடு கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் பெற சுதந்திரம் அடைந்ததிலிருந்து பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பள்ளிக்கல்வி, கல்லூரிக் கல்வி, தொழிற்கல்வி, வயதுவந்தோர் கல்வித் திட்டங்கள் போன்றவைகளும் இதில் அடங்கும். இருப்பினும் நம் நாட்டின் எழுத்தறிவு நிலை 52.11 விழுக்காடேயாகும்.

மக்களுடைய இத்தகைய எழுத்தறிவற்ற நிலைக்குக் கற்கும் பருவத்தில் அவர்கள் பள்ளியில் சேராததும், சேர்ந்த சிலரும் பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே விட்டு விடுவதும் காரணங்களாகும். அரசின் தொடர் முயற்சியால் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தற்போது அதிகரித்துள்ள போதிலும் மாணவர் இடைவிலகல் நிலை தொடர்ந்தே இருக்கிறது. எனவே, இது ஒரு சிக்கலாகவே உள்ளது. இச்சிக்கலுக்குக் கல்வியியல் அறிஞர்கள் தீர்வு காணவேண்டியுள்ளது. இந்நிலையில் தமிழ்ப் பல்கலைக்கழக ஈடாளர் கல்வித்துறை உதவி இயக்குநர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் செ. சுப்பிரமணியன் அவர்கள் பள்ளி இடைவிலகல் பற்றி ஆய்வு செய்து நூல் வெளியிடுவது கல்விச் சமுதாயத்திற்கு பெரிதும் பயனளிக்கும்.

பள்ளி இடைவிலகல்' என்ற இந்நூல் ஏழு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. ஆரம்பக் கல்வியின் இன்றைய பொதுவான நிலையினையும், இடைவிலகியவர்களது சமூக, பொருளாதார நிலைகளையும், இடைவிலகலுக்கான காரணங்களையும் இந்நூல் விரிவாக ஆய்கிறது. இடைவிலகளுக்கான காரணங்கள் மற்றும் இடை விலகியவர்களது சமூக, பொருளாதார நிலைகள் ஆகியவற்றை ஊரக, நகர அளவில் ஒப்பீடு செய்து ஆசிரியர் அளித்துள்ளது பாராட்டுதற்குரியது. வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பாடத்திட்டத்தினைப் பள்ளிக் கல்வித் திட்டத்திலேயே அறிமுகப்படுத்துதல், இடைவிலகலைக் குறைக்க பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களை ஊக்குவித்தல், பள்ளி ஆசிரியர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி அளித்தல் போன்ற பரிந்துரைகள் வரவேற்கத்தக்கன.

முனைவர் செ. சுப்பிரமணியன் அவர்கள் சமூக இயல், வயதுவந்தோர் கல்வி ஆய்விலும் பணியிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பணியாற்றி வருபவர். ஆய்வு முறைப்படி (Research Methods) ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதை இந்நூல் முழுவதும் காணலாம். சமூகவியல், உளவியல், கல்வியியல் போன்ற துறைகளில் ஆர்வமுடைய ஈடுபாடுகொண்ட அனைவருக்கும் இந்நூல் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. இவருடைய பணி மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

4. 3. 98 கி. கருணாகரன்

முகவுரை

நம் பாரதநாடு சுதந்திரம் பெற்றபின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கத் துவங்கியது. *6-14* வயதுடைய குழந்தைகள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வியினை இலவசமாகவும் கட்டாயமாகவும் கொடுக்கவேண்டும் என *1950*ல் இயற்றிய அரசியல் அமைப்புச்சட்டம் வலியுறுத்துகிறது. ஐந்தாண்டுத் திட்டங்களின் வழியும் கல்விக்கு அதிக நிதி நல்கை ஒதுக்கப்படுகிறது. மாணவர்களின் இடைவிலகலைக் குறைக்கவும், பள்ளிச் சேர்க்கையை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் இடைவிலகல்நிலை குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறையவில்லை. இந்நிலை நீடித்தால் ஓரளவு பள்ளியில் கற்றதையும் இவர்கள் மறந்து எழுத்தறிவற்றவர்களாகிவிட வாய்ப்புள்ளது. எனவே, கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இடைவிலகலுக்கான காரணம் பற்றி ஆராய வேண்டியுள்ளது. இதனடிப்படையில் இடைவிலகலுக்கான காரணம் பற்றி தஞ்சை மாவட்டத்தில் *1994 - 96* ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் விளைவே இந்நூலாகும்.

இந்நூலில் ஏழு அத்தியாயங்கள் இடம்பெறுகின்றன. அனைவருக்கும் கல்வி' என்ற இலட்சியத்தை அடைவதற்குத் தடையாக உள்ள காரணிகள் முதல் அத்தியாயத்திலும் ஆரம்பக்கல்வி முன்னேற்றத்திற்கு அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகள் இரண்டாவது அத்தியாயத்திலும், ஆய்வு மேற்கொள்ளப்பட்ட முறை மூன்றாவது அத்தியாயத்திலும், இடைவிலகியவர்களது சமூகப்பொருளாதார நிலை நான்காவது அத்தியாயத்திலும், இடைவிலகலுக்கான காரணங்கள் ஐந்தாவது அத்தியாயத்திலும், பள்ளிச் சூழல் பற்றி ஆறாவது அத்தியாயத்திலும் அளிக்கப்பட்டுள்ளன.

இந்நூல் வெளிவர எல்லா நிலையிலும் ஊக்கமளித்தும் சிறந்ததொரு அணிந்துரை அளித்தும் உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கி. கருணாகரன் அவர்களுக்கும், நூலை அழகுற அச்சிட்டு வெளியிட்ட தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறையினருக்கும் எனது நன்றி.

10. 3. 98 செ. சுப்பிரமணியன்

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்க எண்
1.	அறிமுகம்	1
2.	ஆரம்பக் கல்வியின் நிலை	5
3.	ஆய்வு நெறிமுறை	11
4.	இடைவிலகியவர்களது சமூகப் பொருளாதார நிலை	19
5.	இடைவிலகலுக்கான காரணங்கள்	27
6.	பள்ளிச்சூழல்-ஆய்வு அனுபவ மதிப்பீடு	33
7.	முடிவுகளின் தொகுப்பு	35
	துணைநூற் பட்டியல்	41

பிற்சேர்க்கை

1.	பள்ளி விவரங்களுக்கான வினாப்பட்டியல்	43
2.	இடைவிலகிய மாணவர்களுக்கான நேர்காணல் பட்டியல்	47

1. அறிமுகம்

முன்னுரை

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் கல்வி முன்னேற்றத்தை மையமாக வைத்தே அமைகிறது. இவ்வடிப்படையில், இந்தியாவிலும் சுதந்திரம் அடைந்தபின்பு கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமும், மற்ற திட்டங்கள் மூலமும் அரசு ஏராளமான நிதியினை வழங்கிவருகிறது. தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் அதிக எண்ணிக்கையில் தொடங்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களில் மாணவர்களுக்கு அதிக வசதிகளும், சலுகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. *6-14* வயதுடைய குழந்தைகள் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி *(எட்டாம் வகுப்பிற்குச் சமமான)* (Universalisation of Primary Education) அளித்தாக வேண்டும் என நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது அரசின் இன்றியமையாக் கடமையாகக் கருதப்படுகிறது. *15 - 35* வயதுடைய கல்லாதவர்களுக்கு எழுத்தறிவுத் திட்டங்கள் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், *1991* ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் *52.21* சதவிகிதத்தினரும், தமிழகத்தில் *62.66* சதவிகிதத்தினரும் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர்களாக உள்ளனர் என்பது தெரிகிறது. நம் நாட்டில் ஒவ்வோராண்டும் *12* கோடியே *60* இலட்சம் குழந்தைகள் ஆரம்பக் கல்வி நிலையங்களில் *(1* முதல் *8* ஆம் வகுப்பு வரை*)* சேர்க்கப்பட்டு அவர்களில் *65* சதவிகிதம் பேர் படிப்பை விட்டு இடைவிலகல் (Drop - out) ஆகின்றனர் என்று கூறுகிறார் தேசிய எழுத்தறிவு இயக்கத்தின் முன்னாள் இயக்குநர் திரு. லட்சுமிதர் மிஸ்ரா. ஆரம்பப் பள்ளியில் முதல் நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் பள்ளிப் படிப்பிலிருந்து விடுபட்டவர்கள் *51.2* சதவிகிதம் எனவும், அகில இந்திய அளவில் *62* சதவிகிதம் எனவும் கணக்கிடப்பட்டிருக்கிறது *(கல்வியாளர் டாக்டர் மால்கம் ஆதிசேசய்யா கூறியது)*. *1994-95* ஆம் ஆண்டில் தமிழகத்தில் *1* முதல் *5* ஆம் வகுப்புவரை இடைவிலகியவர்கள் *16.54* சதவிகிதத்தினரும், *1* முதல் *8* ஆம் வகுப்புவரை இடைவிலகியவர்கள் *34.74* சதவிகிதத்தினரும் உள்ளனர் *(தமிழக அரசின் கல்வித் துறையின் அறிக்கை, 1995)*. எனவே பள்ளி

இடைவிலகல் (School Drop-out) என்பது இன்றைய சவாலாகவும், தேசியக் கல்வியின் எதிர்பார்ப்பிற்கு (National Education Goals) முரண்பட்டும் ஒரு தொடர் சிக்கலாகவே உள்ளது. பள்ளியில் ஓரளவு கற்றதையும் இவ் இடைவிலகியவர்கள் காலப்போக்கில் மறந்து மீண்டும் எழுத்தறிவற்றவர்களாக அமைவதற்கு வாய்ப்புள்ளது. இச்சிக்கலுக்குரிய முக்கிய காரணங்களைக் களஆய்வு முலம் கண்டாய்ந்து புதிய வழிமுறைகளும், ஆலோசனைகளும் கூற இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வின் தேவையும், அவசியமும்
(Need and Importance of the study)

இந்தியாவில் *6* முதல் *14* வயதுடையவர்களில் படிக்கத் தெரியாதவர்கள் ஒரு கோடியே *90* இலட்சம் முதல் இரண்டு கோடியே *40* இலட்சம் வரை இருக்கின்றார்கள். அவர்களில் *60* சதவிகிதம் பெண்களாகும். உலகத்திலேயே அதிக எண்ணிக்கையில் எழுதப்படிக்கத் தெரியாத நபர்களும், பள்ளிக்குச் செல்லாத சிறுவர்களும் இந்தியாவில் இருக்கின்றார்கள். அதாவது உலகத்திலுள்ள எழுதப்படிக்கத் தெரியாதவர்களில் *30* சதவிகித வயதுவந்தோர்களும் *50.22* சதவிகித பள்ளிக்குச் செல்லாத சிறுவர்களும் இந்தியாவில் இருக்கின்றனர்.

பள்ளி செல்லும் மாணவர்கள் இடையில் நின்றுவிடும் அளவு குறைந்துவந்தாலும், அவை தொடர்ந்து இன்னும் பெரிய அளவிற்கு நிகழ்ந்து வருவதால் இப்பிரச்சனையும் சிக்கல் நிறைந்து காணப்படுகிறது. ஏறத்தாழ முதலாவது வகுப்பில் சேர்ந்த சிறுவர்களில் பாதிப்பேர் *5* வது வகுப்பை அடைவதற்கு முன்னரே பள்ளியைவிட்டு நின்றுவிடுகின்றனர். அவர்களில் மூன்றில் இருபகுதியினர் 8வது வகுப்பு அடைவதற்கு முன்பே பள்ளியை விட்டு நின்று விடுகின்றனர். இதற்கான காரணங்களைக் கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

'அனைவருக்கும்' கல்வி எனும் கோட்பாட்டின்கீழ் அரசு பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. கல்வியானது *1976* முதல் நடுவண் மற்றும் மாநில அரசுகளின் கூட்டுப்பொறுப்பில் இருந்து வருகிறது. 'அனைவருக்கும் கல்வி' எனும் கோட்பாடு, இந்நாட்டில் பிறந்த அனைத்து குடிமக்களும் இன, வகுப்பு பாகுபாடின்றித் தொடக்கக் கல்வியைப் பெறவும், ஒவ்வொரு குடிமகனும் தான் விரும்புகிற வரை படிப்பைத் தொடரவும் வலியுறுத்துகிறது. இக்கோட்பாட்டினைச் செயல்படுத்தும்போது பின்வரும் தடைகளும் தோன்றி ஆரம்பக் கல்வியினைப் பாதிக்கின்றன.

பொருளாதாரக் குறைபாடுகள்

நமது நாட்டில் *52* சதவிகித மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் *(பேரா. உரு. கனகராசின் உரை, 1996).* இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இவர்களுக்கும் போதிய பொருளாதார வசதி

இல்லாததால் தமது பிள்ளைகளையும் தாம் செய்கின்ற தொழில்களில் ஈடுபடுத்துகின்றனர். சிலர், தமது குழந்தைகளைப் பட்டாசு, பீடி முதலியவை செய்யும் தொழிற்சாலைகளுக்கும் அச்சகத்திற்கும் குழந்தைத் தொழிலாளர்களாக அனுப்பி விடுகின்றனர். அரசினுடைய மதிய உணவுத்திட்டம், இலவச காலணி, நோட்டுப் புத்தகங்கள், சீருடை வழங்குதல் போன்றத் திட்டங்கள் இருந்தாலும், இந்நிலை நீடிக்கவே செய்கிறது.

பாலின வேறுபாடு

நமது நாட்டில் உள்ள பண்பாட்டின்படி ஆண்கள் உழைத்துப பொருளீட்டுவர். பெண்கள் அதனைப் பெற்றுக் குடும்பத்தை நிர்வகிபபார்கள். இதனால் பெண்களுக்குக் கல்வி தேவை இல்லை என்கிற எண்ணம் இன்னும் கிராமப்புறப் பகுதிகளில் இருக்கத்தான் செய்கிறது. வயது வந்த பெண்கள் உயர் கல்விக்கு அதிகமாக அனுப்பப்படுவதில்லை. பள்ளிகளிலும் பெண் குழந்தைகள் படிப்பைப் பாதியிலேயே விட்டுவிடுகின்றனர்.

சாதி வேறுபாடுகள்

நமது நாட்டிலே இன்றைககுச் சாதி வேறுபாடுகள் மறையாது செழித்தோங்கி வளரும் நிலையைக் காண்கிறோம். கிராமப்புறங்களில் சாதி வேறுபாடுகள் அதிகமாக இருக்கத்தான் செய்கின்றன. ஆதிதிராவிடர்களுக்கென்று தனிப்பள்ளிகள், தனி விடுதிகள், உதவித்தொகைகள் போன்றவை அளிக்கப்பட்டாலும் கிராமங்களில் இப்பிரிவினரிடையே அறியாமையும், எழுத்தறிவின்மையும், அதிக அளவிலான இடைவிலகல் நிலையும் காணப்படுகிறன.

வசிப்பிட வேறுபாடுகள்

நகரங்களில் வசிக்கின்ற குழந்தைகளுக்கு நல்ல கல்விக்கூடங்கள், தனிப்பயிற்சி நிறுவனங்கள், பொழுதுபோக்குச் சாதனங்கள், பத்திரிக்கை வசதிகள் ஆகியவை கிராமப்புறக் குழந்தைகளைக் காட்டிலும் அதிகமாகக் கிட்டுகின்றன. கிராமங்களில் இவ்வசதிகள் குறைவாக உள்ளதால் கிராமப்புற மாணவர்களிடையே பெரும்பாலும் கல்வியில் ஆர்வம் குறைவாகவே காணப்படுகிறது.

பாடத்திட்டங்களிலும், பாடப்பயிற்று முறைகளிலும் குறைபாடுகள்

நமது பாடத்திட்டங்கள் தேவைக்கு ஏற்றாற்போல் அவ்வப்போது மாற்றியமைக்கப்படாமல்உள்ளதும், பயிற்று முறைகள் வெறும் வாய்வழி விளக்குமுறைகளாக இருப்பதும் மாணவர்களிடையே சலிப்பையும், சோர்வையும் ஏற்படுத்துகின்றன. இதனாலும் ஆரம்பக்கல்வியில் பாதிப்பு ஏற்பட்டுவிடுகிறது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

மேற்கண்டவைகளினாலும் ஆரம்பக்கல்வியில் தடைகள் ஏற்பட்டு மாணவர்கள் படிப்பை விட்டுவிடும் நிலை ஏற்படுவகால் இவற்றின்

காரணங்களைத் தெளிவாக அறியவும், அவற்றின் நிலையினைக் காணவும் ஆய்வு ஒன்று மேற்கொள்வது தேவையானதாகவும் அவசியமானதாகவும் அமைகிறது.

ஆய்வின் முக்கிய நோக்கங்கள்

இவ்வாய்வு கீழ்க்கண்ட முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. பள்ளி இடைவிலகியவர்களது சமூகப்பொருளாதார நிலைமையை அறிதல்
2. பள்ளி இடைவிலகலுக்கான காரணங்களை அறிதல்
3. பள்ளி இடைவிலகல் நிலையினைக் குறைக்க ஆலோசனைகளை வழங்குதல்.

ஆய்வின் சிறப்புத்தன்மை
(Significance of the study)

அரசின் பல திட்டங்களின்வழி அனைவருக்கும் ஆரம்பக்கல்வியை அளிக்கும்போதும் முழுமையான வெற்றி பெற முடியாததற்கு மாணவர் சேர்க்கைக் குறைவும், மாணவர்களிடையே பள்ளியிலிருந்து இடைவிலகல் ஏற்படுவதும் பிரதான காரணங்களாக அமைகிறது. இவ்வாய்வு, இவற்றில் ஒன்றான பள்ளி மாணவர்களிடையே ஏற்படும் இடைவிலகல் பற்றித் தனியாக, விரிவாக மேற்கொள்வதால் சிறப்பிடம் பெறுகிறது. இடைவிலகலின் முக்கிய விவரங்களை நகர மற்றும் கிராம ஒப்பீட்டு அளவில் ஆய்வு செய்வது சிறப்பான ஒன்றாகும். இடைவிலகலுக்கான காரணங்களை ஆராய்கின்றபோது பெற்றோர்களது சமூகப்பொருளாதார மற்றும் குடும்ப நிலை, மாணவர்களின் பள்ளிநிலை ஆகியவையும் இவ்வாய்வில் கண்டறியப்படுகின்றன.

நோக்கீட்டு நூல்கள்

1. வறுமையும் எழுத்தறிவும், எஸ். ஆதிசேசய்யா, மாநிலப் பள்ளிசாராக் கல்விக்கருவூலம், சென்னை-20, செப்டம்பர், 1990.
2. தமிழக அரசின் கல்வித்துறை அறிக்கை, சென்னை, 1995.
3. எல்லோருக்கும் கல்வி, மாநில பள்ளிசாராக்கல்விக் கருவூலம் சென்னை-20, அக்டோபர், 1993
4. 'அனைவருக்கும் கல்வி' என்ற தலைப்பில் பேராசிரியர் உரு. கனகராசின் உரை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது (18.7.96).
5. Marching Ahead - 14 Years in the cause of Adult/Non-Formal Education. Souvenir. State Resource Centre, Madras - 20, 1992.
6. The Out of School Youth, V.E. Reddy & K.S. Bhat, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1977.

2. ஆரம்பக்கல்வியின் நிலை

நம் நாட்டில் தொடக்க காலத்தில் கல்வி என்பது பொதுவாக மதபோதனைகளைமட்டும் போதிப்பதாகஇருந்தது. குருகுல முறைக்கல்வியில் பெரும்பாலும் உயர்ந்த சாதிக்காரர்களே கல்வி பெற்றனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தொடக்கத்தில் கிறித்தவ இயக்கங்களே (Christian Missionaries) கல்விப் பணியை மேற்கொண்டன. பிற்காலத்தில் மெகாலே போன்றவர்கள் ஆங்கில போதனமுறையை வலியுறுத்தினாலும் வுட்ஸ், உறண்டர் போன்றோரால் உள்ளூர் கல்விமுறையும் ஆதரிக்கப்பட்டுப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. இப்பள்ளிகள் உள்ளூர் நிர்வாகத்தால் நிர்வகிக்கப்பட்டன. 1904 ல் கர்சன் பிரபு, ஆரம்பக்கல்வியை விரிவுபடுத்துவது அரசின் தலையாய கடமைகளில் ஒன்று என தீர்மானம் கொண்டுவந்தார். இதன் அடிப்படையில் ஆரம்பப்பள்ளிகள் அதிகம் ஏற்படுத்தப்பட்டன. 97,854 பள்ளிகள் (1902 வரையில்) ஏற்படுத்தப்பட்டன. உறர்டாக் குழு (1929) பாடமுறையை முன்னேற்றிக் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்று பரிந்துரைத்தது. மத்தியக் கல்வி ஆலோசனை வாரியம் 1935ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. 1944 ல் சார்ஜன்ட் என்பவரின், 'இந்தியாவில் விடுதலைப்போருக்குப்பின் கல்வி வளர்ச்சித்திட்டம்' என்ற திட்டத்தில் கட்டாய இலவசக்கல்வி பரிந்துரைக்கப்பட்டது.

சுதந்திரம் அடைந்தபின், இந்திய அரசு கல்வியைவளர்க்கப் பல முயற்சிகளை மேற்கொண்டது. அப்போதைய கல்வி அமைச்சர் மௌலானா ஆசாத் (1948) இதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். ஆரம்பக்கல்விக்கான பாடத்திட்டங்கள், பாடமுறை போன்றவை வரையறுக்கப்பட்டன. கல்வி வளர்ச்சிக்கு நிதி ஒதுக்குவதற்கான வழிமுறைகளுக்காக 'கெர்' என்பவர் தலைமையிலான குழு 1948 ல் போடப்பட்டது. அதில், 6 - 14 வயதுடையவர்கள் கட்டாயக்கல்வி பெற வலியுறுத்தப்பட்டது.

1950ல் அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநில வழிமுறைக் கொள்கைகளில் 45 வது பிரிவில், 6 - 14 வயதுடைய சிறுவர்கள் அனைவருக்கும் 10 ஆண்டுகளுக்குள் இலவச கட்டாய ஆரம்பக்கல்வி அளிக்கப்படவேண்டும் என சரத்து உருவாக்கப்பட்டது. இச்சட்டத்தில் 46 ஆவது பிரிவின்படி, மிகவும் பின்தங்கிய பிரிவினருக்குப் பொருளாதார மற்றும் கல்வி அபிவிருத்தியில்

ஒவ்வொரு மாநில அரசாங்கமும் சிறப்புக்கவனமும், அக்கறையும் செலுத்த வேண்டும் எனக்கூறப்படுகிறது.

1951 ஆம் ஆண்டு முதல் நம் நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் கல்விக்கென்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்பக்கல்வி, உயர்கல்வித்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1968 ஆம் ஆண்டில் தேசிய கல்விக்கொள்கை ஏற்படுத்தப்பட்டது. இதன்படி நாடு முழுவதும் பொதுவான கல்விமுறை உருவாக்கப்பட்டது. இம்முறை *10* வருட பள்ளிக்கல்வி, *2* வருட மேல்நிலைக்கல்வி மற்றும் *3* ஆண்டு பட்டப்படிப்பினைக் கொண்டதாகும்.

தேசிய அளவில் பல கருவூல மையங்களை மத்திய அரசு அமைத்துள்ளது. பள்ளி மற்றும் ஆசிரியப் பயிற்சித் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி மத்திய மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவும் *(என்.சி.இ.ஆர்.டி)* இவற்றில் அடங்கும். இந்தக் குழு நான்கு பிராந்திய கல்வியியல் கல்லூரிகளையும், தேசிய அளவில் களப்பணியாளர்கள் கூட்டமைப்பையும் நடத்திவருகின்றது. தேசிய கல்வித்திட்ட நிருவாக நிறுவனம் *(என்.ஐ.இ.பி.எ)*, இந்திய மொழிகள் மைய நிறுவனம் *(சி.ஐ.ஐ.எல்)*, ஆங்கில மற்றும் பிற வெளிநாட்டு மொழிகள் மையநிறுவனம் *(சி.ஐ.இ.எப்.எல்)* ஆகியன மற்ற கல்விக் கருவூலங்களாகும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் *42*-வது திருத்தம் ஏற்படும் வரையில் கல்விப்பிரிவில் சில குறிப்பிட்ட வகைகள் தவிர கல்வி மாநிலப் பட்டியலில்தான் இருந்தது. உயர்கல்வி அல்லது ஆய்வு நிறுவனங்களின் தரத்தை மதிப்பீடு செய்தல், மத்தியப் பல்கலைக்கழகங்கள், அறிவியல் தொழிற்கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களை நிறுவி நிர்வகித்தல் போன்ற கல்வி வகையினங்கள் மட்டும் மத்தியப்பட்டியலில் இருந்து வந்தன. இதனை அடுத்து அகில இந்திய அளவில் கல்வித்துறையில் கொள்கைகளை உருவாக்கும் நடவடிக்கைகளை எளிமைப்படுத்தவேண்டும் என்பதற்காகக் கல்வி *1976* முதல் பொதுப்பட்டியலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு 'தேசிய புதுக்கல்விக் கொள்கை' உருவாக்கப்பட்டது. இக்கொள்கை, சமுதாயப் பிற்போக்குத்தன்மையினாலும், சமூகப்பொருளாதாரப் பின்னடைவாலும் சிறுவர், சிறுமியர்களுக்கு பள்ளி வசதிகள் போதிய அளவில் இல்லை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. கவர்ச்சியற்ற பள்ளிச்சூழல், திருப்தியற்ற நிலையில் இருக்கும் பள்ளிக் கட்டிடங்கள், கற்பிக்கும் சாதனங்கள் தேவையான அளவிற்கு இல்லாமை ஆகியன சிறுவர்களிடமும், பெற்றோர்களிடமும் கல்வியின் மீது உள்ள ஆர்வத்தைக் குறைக்கின்றன. எனவே ஆரம்பக் கல்வி நிலையங்கள் சீராக இருக்க வேண்டும் என இக்கொள்கைக் கூறுகிறது. இக்கொள்கையின் செயல்திட்டப்படி சுதந்திரமான, ...மான, கட்டாய ஆரம்பக்கல்வி முறையை உருவாக்கி *21* வது நூற்றாண்டு

வருமுன் *14* வயதுவரை உள்ள அனைத்துச் சிறுவர்களுக்கும் ஆரம்பக்கல்வி அளிக்கப்படவேண்டும் என்பதுவே இதன் முக்கிய இலக்காகும். கற்பிக்கும் முறையை மாற்றியமைக்கவும், பணிமுன் பயிற்சியையும், பணி இடைப்பயிற்சியையும் ஊக்குவிக்க வேண்டும் எனவும் இக்கொள்கை எதிர்பார்க்கிறது. *1992* ஆம் ஆண்டு இக்கொள்கையும், இதன் செயல்திட்டங்களும் அனைவருக்கும் ஏற்புடைய வணணம் புதுப்பிக்கப்பட்டன

மாநில அரசுகளின் கொள்கைகளும், தேசியக் கொள்கையினைத் தழுவியே அமைந்து திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகின்றன. ஒருமித்த உணர்வு என்ற அடிப்படையில் **முழு எழுத்தறிவுத் திட்டம், கரும்பலகை செயல் திட்டம்,** புதிய **மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டம்** போன்றவற்றை மாநில அரசுகள் ஏற்கனவே தொடங்கியுள்ளன

1988 முதல் முழு எழுத்தறிவுத் திட்டம், *15-35* வயதிற்குள்ளான கல்லாதவர்களுக்கு முறைசாராக் கல்வி முறையில் எழுத்தறிவு அளிக்கிறது இன்று சுமார் *400* மாவட்டங்களுக்கு மேல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கேரளா மற்றும் பாண்டிச்சேரி *முழுமையான எழுத்தறிவு* பெற்ற மாநிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் *(29)* இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

கரும்பலகை செயல்திட்டம், தேசியக் கல்விக்கொள்கையின் அடிப்படையில் *1986* ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது இத்திட்டம் ஓராசிரியர் பள்ளியை ஈராசிரியர் பள்ளியாக மாற்றுவதும், ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தது *2* பெரிய அறைகளை ஏற்படுத்துவதுமாகும். இத்திட்டத்தினால் *1,03,364* ஆசிரியர்கள் புதிதாக பணிக்கு அமர்த்தப்பட்டனர். *1,15,091* புதிய அறைகள் பள்ளிகளில் கட்டப்பட்டன. இருப்பினும் இன்னும் இவ்வசதிகள் இல்லாமல் பல பள்ளிகள் இருப்பதாகத் தெரிகிறது

மாவட்ட ஆரம்பக் கல்வித்திட்டம் *1993-94* ஆம் ஆண்டு துவங்கியது முதல் *5* வகுப்புகளிலும், அதற்கு ஈடாகவுள்ள பள்ளிசாராக் கல்விமுறை மூலம் நடத்தப்படும் வகுப்புகளிலும் ஆரம்பக் கல்விக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதில் பெண்கள், பின்தங்கிய மக்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தொடக்கத்தில் மத்தியப்பிரதேசம், ஒரிசா, அசாம், அரியானா, மகாராட்டிரம், கர்நாடகம், தமிழ்நாடு, கோளம் ஆகிய *8* மாநிலங்களில் *43* மாவட்டங்களில் இத்திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் *110* மாவட்டங்களில் இந்தத் திட்டத்தைத் தொடங்க இலக்கு ஏற்படுத்தப்பட்டது. வெளிநாடுகளின் உதவியோடு *19* கோடியே *50* இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுகிறது.

*1986*ல் புதிய தேசிய கல்விக்கொள்கை ஏற்படுத்தப்பட்ட பின்பு **குறைந்தபட்ச கற்கும் அளவு** நிர்ணயம் செய்ய முயற்சி செய்யப்பட்டு இதற்காகப் புதுமையான சோதனைத் திட்டங்கள் [illegible]-*92* ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன

இத்திட்டத்தில் *3000* பள்ளிகளின் *2,50,000* மாணவர்கள் பயின்றனர். இதன் விளைவுகளை அறிய உத்திரப்பிரதேசத்தில் ஆய்வு செய்யப்பட்டதில், கற்பதின் மூலம் கிடைக்க வேண்டிய பலனை அதிகரிக்க மேலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற முடிவு கிடைத்துள்ளது.

ஊனமுறற சிறுவர்களுக்கு அடிப்படைக் கல்வியைப் போதிக்கும் சாதனங்களைச் சிறப்புத் திட்டங்கள் மூலம்தான் பெற வேண்டியுள்ளது. *1992* ஆம் ஆண்டு செயல்திட்டப்படி *1* கோடியே *39* ஆயிரம் ஊனமுற்ற சிறுவர்கள் இருப்பது தெரிகிறது. புதிய கல்விக்கொள்கை இவர்களது முன்னேற்றம் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. *1035* சிறப்புப் பள்ளிகளில் பெரும் எண்ணிக்கையிலான ஊனமுற்றவர்கள் கற்று வருகின்றார்கள்.

1991-92 ஆம் ஆண்டில் ஆரம்பக்கல்வியில் பதிவு *5* மடங்கு அதிகரித்துள்ளது. *1* கோடியே *92* இலட்சத்திலிருந்து, *10* கோடியே *16* இலட்சம் அதிகரித்துள்ளது. *1950 - 51* ல் மொத்தப் பதிவு விகிதம், *6* முதல் *11* வயது உள்ள சிறுவர்கள் *42.6* சதவிகிதத்திலிருந்து *1991-92* ஆம் ஆண்டில் *102.7* சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது. *1950-51*இல் *11* முதல் *14* வயது வரை உள்ள சிறுவர்கள் பற்றிய பதிவு *12.7* சதவிகிதத்திலிருந்து *1991-92* ஆம் ஆண்டில் *61.2* சதவிகிதம் அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் விளக்குகின்றன. இருப்பினும் *6 - 14* வயது வரையுள்ள கல்வி அற்ற மக்கள் *1991* மார்ச்சு *1* ஆம் நாள் வரை *15* கோடியே *30* இலட்சம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இது மொத்த மக்கள் தொகையில் *18* சதவிகிதமாகும்.

அடிப்படைக்கல்வியில் *1950-51* ஆம் ஆண்டில் பெண்கள் பதிவு *54* இலட்சமாகும். *1991-92* ல் இது *4* கோடியே *24* இலட்சமாக அதிகரித்துள்ளது. இருப்பினும், ஆண், பெண் ஆகிய இருவருக்குமிடையே நிலவும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கின்றது. பெண்கள் பள்ளியைவிட்டுச் செல்லுதலும் அதிகமாக உள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

எனவே, அனைவருக்கும் ஆரம்பக்கல்வித் திட்டம் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளது. *8*ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதற்கான சில இலக்குகள் தீர்மானிக்கப்பட்டன. அதன்படி ஆதிதிராவிடர், மலைவாழ் மக்கள் ஆகிய சமூகத்தின் ஆண், பெண் உள்ளிட்ட அனைத்துச் சிறுவர்களையும் பள்ளியில் பதிவு செய்யப்படவேண்டும். ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்துதல், பள்ளியை விட்டு நின்றுவிட்ட சிறுவர்கள், பள்ளி செல்லா சிறுவர்கள் ஆகியோருக்குப் பள்ளி சாராக்கல்வி வசதியை ஏற்படுத்துதல், இயங்கும் கரும்பலகைத் திட்டத்தைத் திருத்தி பள்ளி வசதிகளைப் பெருக்குதல், பெண்கள், ஆசிரியர் ஆகியோருக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளித்து வட்டாரக் குழுக்கள் அமைத்து ஆரம்பக் கல்வித்திட்டம் சிறப்பாக நடைபெற கண்காணிப்பு செய்தல் ஆகியன இத்திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்டு சில பணிகள் நடந்து முடிந்துள்ளன.

கல்வித்துறை நிர்வாகத்தைப் பரவலாக்குவது பற்றி மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுவின் அறிக்கை **மக்கள் பங்கேற்பு முறை** பற்றிக் கூறுகிறது. கல்வி அமைப்பைப் பரவலாக்குதல் என்னும் கொள்கை, வட்டாரச் சமூகப் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்பப் பள்ளி நேரத்தை மாற்றியமைத்தல் அல்லது சிறிது தள்ளி வைத்தல் அல்லது சமூகத்தின் ஆதரவுடன் பள்ளியை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளைப் பள்ளி அமைப்பில் மேற்கொள்ளத்தக்க வகையில் முடிவுகள் எடுக்க வழிவகை செய்கிறது.

மேற்கண்ட செய்திகள் நம் நாட்டில் உள்ள ஆரம்பக்கல்வியின் நிலையினைத் தெளிவுபடுத்துகின்றன.

நோக்கீட்டு நூல்

1 எல்லோருக்கும் கல்வி, மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலம், சென்னை - *20*, அக்டோபர், *1993*.

3. ஆய்வு நெறிமுறை
(Research Methodology)

கல்வி என்பது மனிதனின் பிறப்புரிமை. இதனை ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டும் *1950* ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச்சட்டப்படி, *1960*க்குள் பதினாலு வயதிற்குக் குறைவான அனைத்துக் குழந்தைகளும் இலவச கட்டாயக் கல்வியைப் பெறவேண்டும். ஆனால் இன்றுவரை இது முழுமையான வெற்றி பெறாமல் உள்ளது. மாணவர்களின் இடைவிலகல் ஏற்கனவே கண்டவாறு இதற்குத் தடையாக உள்ளது. இவ்இடைவிலகலுக்கான காரணங்களை அறிய இவ்வாய்வு அறிவியல் முறையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாய்வு *6 -14* வயதில் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் முதல் *8*வது வகுப்பு வரையிலான படிப்பில் இடைவிலகியவர்களைப் பற்றியதாகும். ஏற்கனவே குறிப்பிட்டவாறு, நகர மற்றும் கிராம ஒப்பீட்டு அளவில் இடைவிலகல் ஆராயப்படுகிறது. களப்பணி மேற்கொண்டு அதில் கிடைத்த விவரங்களின் அடிப்படையில் இவ் ஆய்வு தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வு தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் *(1994* முதல் *1996* வரை - *2* ஆண்டுகள்*)* மேற்கொள்ளப்பட்டது.

களஆய்வு மேற்கொண்ட பகுதி

தமிழகத்தில் பெரிய மாவட்டங்களில் தஞ்சாவூர் மாவட்டமும் ஒன்றாக இருந்ததாலும், பள்ளி மாணவர்களின் இடைவிலகல் மாநில அளவில் உள்ளதே ஏறத்தாழ தஞ்சாவூர் மாவட்டத்திலும் (தமிழகத்தில் *1* முதல் *5* வகுப்பு வரையில் இடைவிலகியவர்கள் *20.32* சதவிகிதமும், *1* முதல் *8* ஆம் வகுப்பு வரையில் இடைவிலகியவர்கள் *44.48* சதவிகிதத்தினராவர். தஞ்சாவூர் மாவட்டத்தில் *1* முதல் *5* வகுப்பு வரையில் இடைவிலகியவர்கள் *22.27* சதவிகத்தினரும், *1* முதல் *8* ஆம் வகுப்பு வரையில் இடை விலகியவர்கள் *46.38* சதவிகிதத்தினருமாவர். ஆதாரம்: அரசுக் கல்வித் துறை பள்ளி விவர அறிக்கை *1990 - 91)* உள்ளதாலும் இவ் ஆய்வு தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது


தஞ்சாவூர் மாவட்டம்
தென்னார்காடு மாவட்டம்
வ
திருச்சி மாவட்டம்
திருப்பனந்தாள்
திருவிடைமருதூர்
கும்பகோணம்
பாபநாசம்
திருவையாறு
வலங்கைமான்
அம்மாபேட்டை
பூதலூர்
தஞ்சாவூர்
நாகை காயிதே மில்லத் மாவட்டம்
ஒரத்தநாடு
திருவோணம்
மதுக்கூர்
பட்டுக்கோட்டை
பேராவூரணி
சேதுபாவாசத்திரம்
பாக் ஜலசந்தி
புதுக்கோட்டை மாவட்டம்
மாவட்ட எல்லை
கல்வி மாவட்ட எல்லை
வட்ட எல்லை
ஒன்றிய எல்லை
வட்ட தலைமையிடம்
ஒன்றிய தலைமையிடம்
முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்
மாவட்டக் கல்வி அலுவலர் ,,
மகளிர் பள்ளி ஆய்வாளர் ,,
உதவிக் கல்வி அலுவலர் ,,
,, ,, ,, ,, [நகரம்]
மண்டல உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகம் [ஆண்]
,, ,, ,, ,, [பெண்]

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது. தஞ்சாவூர் சோழ அரசர்களின் தலைநகரமாக இருந்தது. பிறகு நாயக்கர் மற்றும் மராத்திய அரசர்களாலும் ஆளப்பட்டது. தஞ்சையின் சிறப்பாகப் பெரியகோயிலும், கல்லணை மற்றும் சரசுவதி மகால் நூலகமும் விளங்குகின்றன. இம்மாவட்டம் *3602.86* சதுர கிலோமீட்டர் பரப்பளவுடையதாகும். வடக்கில் திருச்சிராப்பள்ளி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களையும், மேற்கில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தையும், தெற்கில் புதுக்கோட்டை மாவட்டத்தையும், கிழக்கில் நாகை காயிதே மில்லத் மாவட்டம் மற்றும் வங்காள விரிகுடாக் கடலினையும் தஞ்சாவூர் மாவட்டம் எல்லைகளாகக் கொண்டுள்ளது. *1991* ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் *21,38,845* மக்கள் வாழ்கின்றனர். *(*ஆண்கள் *10,70,217,* பெண்கள் *10,68,628).* இதில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் *3.84* இலட்சமாகும். இம்மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள் *2.81* இலட்சமும், விவசாயத்தில் ஈடுபட்டோர் *1.90* இலட்சமும் உள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டம், *2* கல்வி மாவட்டங்களையும், *3* வளர்ச்சிக் கோட்டங்களையும், *3* வருவாய் கோட்டங்களையும், *9* வட்டங்களையும், *15* ஊராட்சி ஒன்றியங்களையும், *3* நகராட்சிகளையும் *16* கல்வி வட்டாரங்களையும் *(15* ஊரகம் *+ 1* நகரம்*), 639* கிராமப் பஞ்சாயத்துக்களையும், *23* நகரப் பஞ்சாயத்துக்களையும், *987* கிராமங்களையும் கொண்டுள்ளது.

இம்மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகமும், *9* கலைக்கல்லூரிகளும், *4* பொறியியல் கல்லூரிகளும், ஒரு மருத்துவக்கல்லூரியும், *2* ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களும், *12* தொழிற்பயிற்சி நிறுவனங்களும், *1586* பள்ளிகளும் கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்ட எழுத்தறிவு நிலை *57.64* சதவிகிதமாகும் *(*ஆண்கள் *66.35* சதவிகிதம், பெண்கள் *47.78* சதவிகிதம்*).*

களப்பணியும் தரவு திரட்டுதலும்

தஞ்சாவூர் மாவட்டம் *2* கல்வி மாவட்டங்களைக் கொண்டது. அவை *1.* தஞ்சாவூர் கல்வி மாவட்டம், *2.* பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம்.

1993 - 94 ஆம் ஆண்டில் பள்ளிகளின் விவரம்

வ.எண்.	கல்வி மாவட்டம்	பள்ளிகளின் எண்ணிக்கை	
		தொடக்கப்பள்ளிகள்	*நடுநிலைப்பள்ளிகள்*
1.	*தஞ்சாவூர்*	*718*	*161*
2.	*பட்டுக்கோட்டை*	*426*	*69*

இவ்விரண்டு கல்வி மாவட்டத்தையும் ஒப்பிடும்போது தொடக்கப் பள்ளிகளும், நடுநிலைப்பள்ளிகளும் அதிக எண்ணிக்கையில் தஞ்சாவூர் கல்வி

மாவட்டத்திலேயே உள்ளதால் இவ்வாய்விற்கான களப்பணி தஞ்சாவூர் கல்வி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

தஞ்சாவூர் கல்வி மாவட்டம் *10* வட்டாரங்களைக் கொண்டுள்ளது. அவையாவன: *1.* தஞ்சாவூர் (நகரம்), *2.* தஞ்சாவூர் (ஊரகம்), *3.* பூதலூர், *4.* திருவையாறு, *5.* கும்பகோணம், *6.* திருவிடைமருதூர், *7.* திருப்பனந்தாள், *8.* பாபநாசம். *9.* வலங்கைமான். *10* அம்மாபேட்டை.

ஒவ்வொரு வட்டாரக் கல்வி அலுவலகமும் ஒரு உதவிக் கல்வி அலுவலர் (AEO) தலைமையில் செயல்படுகிறது. பள்ளி இடைவிலகல் நகர மற்றும் கிராம (Urban and Rural) ஒப்பீட்டு அளவில் ஆய்வு செய்யப்படத் தீர்மானிக்கப்பட்டதால் நகரத்திற்கு ஒன்றும், கிராமப் பகுதிகளுக்கு ஒன்றும் ஆக இரண்டு வட்டாரங்கள் தெரிவு செய்யப்பட்டன. மேற்கண்ட வட்டாரங்களில் **தஞ்சாவூர் (நகரம்)** என்ற வட்டாரம் மட்டும் நகரப்பகுதியாக உள்ளதால் இவ்வட்டாரம் நகரப்பகுதிகளின் சார்பாக கள ஆய்விற்குத் தெரிவு செய்யப்பட்டது. கிராமப்பகுதிகளின் சார்பாக *9* வட்டாரங்கள் இருந்தபோதிலும் **தஞ்சாவூர் (ஊரகம்)** என்ற வட்டாரம் அதிக அளவில் பள்ளிகளைக் கொண்டுள்ளதால் கிராமப்பகுதிகளின் சார்பாகக் கள ஆய்விற்கு இவ்வட்டாரம் தெரிவு செய்யப்பட்டது.

பள்ளிகளின் விவரம்
தஞ்சாவூம் (நகரம்) மற்றும் தஞ்சாவூர் (ஊரகம்)

வ.எண்.	வட்டாரம்	பிரிவு	பள்ளிகள் தொடக்கப்பள்ளிகள்	நடுநிலைப்பள்ளிகள்
1.	தஞ்சாவூர் (நகரம்)	*1.* ஆதிதிராவிடர் பள்ளி	*1*	
		2. நகராட்சிப் பள்ளி	*11*	*8*
		3. அரசு உதவி பெறும் பள்ளி	*25*	*14*
		கூடுதல்	*37*	*22*
2.	தஞ்சாவூர் (ஊரகம்)	*1.* ஆதிதிராவிடர்பள்ளி	*17*	
		2. நகராட்சிப்பள்ளி	*63*	*12*
		3. அரசு உதவி பெறும் பள்ளி	*11*	*6*
		கூடுதல்	*91*	*18*

மேற்கண்ட ஒவ்வொரு வட்டாரத்திலும் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகள் *5* பிரிவுகளாக இடம் பெற்றுள்ளதால், ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு பள்ளி வீதம் இரண்டு வட்டாரத்திற்கும் சேர்த்துப் பின்வரும் *10* பள்ளிகளில் *(5* பிரிவு X *2* வட்டாரம*)* இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட இப்பள்ளிகள் தத்தம் பிரிவில் அதிக மாணவர்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு பள்ளியிலும் *1994-95* ஆம் ஆண்டில் இடைவிலகிய *15* பேர்கள் தகவலாளிகளாக (Respondents) ஏகபோகபிரதிநிதித்துவ அடிப்படையில் (Stratified Proportionate Random Sampling) தேர்ந்தெடுத்து ஆய்வு நடைபெற்றது. அவ்வாண்டில் ஒரு பள்ளியில் *15* நபர்களுக்கும் குறைவாக இடைவிலகியவர் இருந்தால் அதற்கு முந்தைய ஆண்டில் விலகியவர்களும் ஆய்விற்கு சேர்த்துக் கொள்ளபட்டனர். இறுதியாக *126* நபர்கள் இவ்வாய்வில் தகவலாளிகளாக இடம் பெற்றனர்.

வ.எண்.	பள்ளிகள்	மொத்தம் இடை விலகியவர்கள்	இடை விலகியவர்களில் தகவலாளிகள்
	நகரப்பள்ளிகள்		
1.	ஆதித்திராவிடர் தொடக்கப்பள்ளி, படைவெட்டியம்மன் கோயில் தெரு	*9*	*9*
2.	நகராட்சித் தொடக்கப்பள்ளி, கூட்டுறவு காலனி	*15*	*15*
3.	தூய இதயம் தொடக்கப்பள்ளி, மோரீஸ் கார்னர்	*4*	*4*
4.	நகராட்சி நடுநிலைப்பள்ளி, புதுப்பட்டினம்	*56*	*15*
5.	கணேச வித்யாசாலா நடுநிலைப்பள்ளி, பூக்காரத்தெரு	*38*	*15*
	கிராமப்பள்ளிகள்		
1.	ஆதிதிராவிடர் தொடக்கப்பள்ளி, மானோசிப்பட்டி	*8*	*8*
2.	ஒன்றிய தொடக்கப்பள்ளி, மாரியம்மன்கோயில்	*99*	*15*
3.	புனித மிக்கயேல் தொடக்கப்பள்ளி, மாதாக்கோட்டை	*15*	*15*
4.	ஒன்றிய நடுநிலைப்பள்ளி, குருங்குளம்	*15*	*15*
5.	புனிதமேரி நடுநிலைப்பள்ளி, திருக்கானூர்பட்டி	*15*	*15*
	கூடுதல்		*126*

தரவு திரட்டப் பயன்படுத்திய பட்டியல்கள்

இவ்ஆய்வில் பள்ளி பற்றிய பொது விவரமும் மற்றும் இடைவிலகியவர்கள் பற்றியும் அறிய வினாப்பட்டியல் (Questionnaire) ஒன்றும், இடைவிலகலுக்கானகாரணங்கள், குடும்ப விவரம் போன்றவைகள் அறிய நேர்காணல் பட்டியல் (Interview Schedule) ஒன்றும் பயன்படுத்தப்பட்டது.

வினாப்பட்டியல்

பள்ளி பற்றிய பொது விவரம், கையாளும் ஊக்குவிப்பு முறைகள், பள்ளியில் உள்ள வசதிகள், பாடம் போக மாணவர்களை ஈடுபடுத்தும் செயல்கள், பள்ளியிலிருந்து இடைவிலகியவர் விவரம் போன்றவை அடங்கிய வினாப்பட்டியல் ஒன்று தயாரித்து அதன்மூலம் *10* பள்ளிகளின் நிர்வாகிகளிடமிருந்து விவரம் பெறப்பட்டது.

நேர்காணல் பட்டியல்

பள்ளியிலிருந்து விடுபட்டவர் மற்றும் அவர் குடும்ப விவரம், இடைவிலகலுக்கான காரணங்கள், படிப்பினைத் தொடர ஆர்வம் போன்ற விவரங்கள் அடங்கிய நேர்காணல் பட்டியல் ஒன்று தயாரித்து *1* முதல் *8* வகுப்பில் பள்ளியிலிருந்து இடைவிலகிய *126* நபர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன.

களஆய்வு மேற்கொண்ட காலம்

இவ்வாய்விற்கான களப்பணி *1995* ஆம் ஆண்டில், ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் திங்கள்களிலும் *1996* ஆம் ஆண்டில் மார்ச்சுத் திங்களிலும் தஞ்சை ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு விவரங்களைத் தொகுத்த முறை (Frame work of Analysis)

வினாப்பட்டியல் மற்றும் நேர்காணல் பட்டியல்கள் மூலம் பெற்ற விவரங்கள் எடுத்தெழுதப்பட்டு (Transcribed) தொகுக்கப்பட்டன. பிறகு அவைகள் அட்டவணைகளாக்கப்பட்டன (Tables). அட்டவணைகளின் விவரங்கள் சதவிகித எண்ணிக்கையில் (Percentage Figures) இவ்வறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ளன. தேவையான இடங்களில் வரைபடங்களும் (Diagrams) பயன்படுத்தப் பட்டுள்ளன.

அத்தியாயங்கள்

இவ் ஆய்வு ஏழு பகுதிகளைக் கொண்டது. முதல் அத்தியாயம், இவ் ஆய்வு பற்றிய அறிமுகம், ஆய்வின் அவசியம் போன்றவை பற்றிக் கூறுகிறது.

இரண்டாவது அத்தியாயத்தில் ஆரம்பக்கல்வியின் நிலை பற்றிய செய்திகள் எடுத்து இயம்பப்படுகின்றன.

மூன்றாவது அத்தியாயத்தில் ஆய்வு மேற்கொண்ட முறைபற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

நான்காவது அத்தியாயத்தில் இடைவிலகியவர்களது சமூகப் பொருளாதார நிலைகள் அறியப்படுகின்றன.

ஐந்தாவது அத்தியாயத்தில்இடைவிலகலுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு விளக்கப்படுகின்றன. இடைவிலகியவர்களது கல்வி உணர்வுகளும் (Attitudes) பிரதிபலிக்கப்படுகின்றன.

ஆறாவது அத்தியாயத்தில் பள்ளிச்சூழல் பற்றிய அனுபவ மதிப்பீடு அளிக்கப்பட்டுள்ளது.

ஏழாவது அத்தியாயத்தில் ஆய்வின் முடிவுகள் தொகுத்து வழங்கப்பட்டு, பரிந்துரைகளும் கூறப்பட்டுள்ளன.

நோக்கீட்டு நூல்கள்

1. தமிழக அரசுக் கல்வித்துறை புள்ளி விவர அறிக்கை, பள்ளிக் கல்வித்துறை, சென்னை, *1990 - 91.*

2. கல்வித் தகவல்கள், தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், *1993 - 94.*

3. ஆண்டு நிதி அறிக்கை, தஞ்சாவூர் மாவட்ட முன்னோடி வங்கி, (இந்தியன் ஓவர்சீஸ் வங்கி), *1993 - 94.*

4. இடைவிலகியவர்களது சமூகப் பொருளாதார நிலை

மக்களது சமூக, பொருளாதார நிலைகளைப்பொருத்தே நாட்டின் முன்னேற்றம் அமைகிறது. சமூகப் பொருளாதாரத்தில் உயர்ந்து இருப்பவர்கள் கல்வியிலும் முன்னேறியுள்ளவர்களாகவே உள்ளனர். இதைப் போன்றே மாணவர்களின் இடைவிலகலுக்கும் அவர்களது சமூகப்பொருளாதார நிலை, குடும்பநிலை போன்றவைகளுக்கும் தொடர்பு இருப்பதைக் காண முடிகிறது. எனவே, இவைபற்றி ஆய்வது அவசியமாகிறது. சேகரிக்கப்பட்ட விவரங்கள் அட்டவணைகள் மூலமும், வரைபடங்கள் மூலமும் விவரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை-1 பால் (இனம்)

வ.எண்.	பால்	ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	ஆண்	45 (35.7%)	33 (26.19%)	78 (61.90%)
2.	பெண்	23 (18.25%)	25 (19.84%)	48 (38.09%,
	மொத்தம்	68 (53.96%)	58 (46.03%)	126 (99.99%)

அட்டவணை-1 மூலம் இடைவிலகியவர்களில் அதிகம்பேர் ஆண்கள் .62%) என்பது தெரியவருகிறது. 38 சதவிகிதம் பெண்கள் இடைவிலகியுள்ளதையும் காண முடிகிறது. 54 சதவிகிதம் ஊரகப் பகுதியிலும் 46 சதவிகிதம் நகரப்பகுதியிலும் இடைவிலகியவர்கள் உள்ளனர். பேராசிரியர் ஈசுவரரெட்டியின் ஆய்விலும் பொதுவாக ஊரகப்பகுதியில்தான் இடைவிலகியவர்கள் அதிகம் உள்ளதைக் காண முடிகிறது.

ஊரக நகர அளவில் ஒப்பிடும்போது பெண்களிடையே வேறுபாடு இல்லாவிட்டாலும், ஆண்களிடையேநகரத்தைக் (26.19%) காட்டிலும் ஊரகப்



50
40
30
20
10
0
சதவிகிதங்கள்
35.71%
18.25%
26.19%
19.84%
ஊரகம்
நகரம்
ஆண்
பெண்

பகுதியில் *(35.71%)* அதிகமாக இடைவிலகல் ஏற்படுவதுவும் இவ் அட்டவணையிலிருந்து தெரியவருகிறது. ஆண்களிடையே இடைவிலகல் அதிகமாக இருப்பதும், அது ஊரகப்பகுதியில் அதிகமாக உள்ளதும், தஞ்சை மாவட்டம் விவசாயம் சார்ந்ததாக உள்ளதால் பொதுவாக இவர்களின் இடைவிலகலுக்கு இதுவே காரணமாக அமையலாம்.

அட்டவணை-2 மதம்

வ. எண்.	மதம்	ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	இந்து	47(37.30%)	36(28.57%)	83(65.87%)
2.	இந்து அல்லாத மற்ற மதங்கள்	21(16.67%)	22(17.46%)	43(34.13%)
	மொத்தம்	68	58	126(100%)

அட்டவணை-2, இடைவிலகியவர்களது மதம் பற்றி விளக்குகிறது. மற்ற மதத்தினரைக் *(34.13%)* காட்டிலும் இந்துக்களே அதிகமாக உள்ளனர் *(65.87%)*. இவர்கள் நகரப்பகுதியைக் காட்டிலும் கிராமங்களில் அதிகம் உள்ளனர். ஆய்வு மேற்கொண்ட பகுதியில் இயற்கையிலேயே இந்துக்கள் அதிகம் நிறைந்திருப்பதும் இதற்குக் காரணமாகக் கூறலாம்.

அட்டவணை-3 சாதி (வகுப்பு)

வ.எண்	மதம்	ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	பிற்பட்டவகுப்பினர் (மிகவும் பிற்பட்ட வகுப்பினர் உள்ளிட்டு)	45 (35.71%)	45 (35.71%)	90 (71.43%)
2.	தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (ஆதிதிராவிடர்)	21 (16.66%)	9 (7.14%)	30 (23.81%)
3.	மற்ற வகுப்பினர்	2 (1.59%)	4 (3.17%)	6 (4.76%)
	மொத்தம்	68	58	126 (100.00%)

அட்டவணை-3ல் இடைவிலகியவர்களது சாதி பற்றிக் கூறப்படுகிறது. இடைவிலகியவர்களில் பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் *71.43* சதவிகிதமும், ஆதிதிராவிடர் *23.81* சதவிகிதமும், மற்றவர்கள் *4.76* சதவிகிதமும் உள்ளனர். பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் கிராம, நகர அளவில் சமமாகவும் உள்ளனர். இடைவிலகியவர்களில் ஆதிதிராவிடர் பிற்பட்ட வகுப்பினரைக் காட்டிலும் குறைவாக உள்ளது மகிழ்ச்சிதரக்கூடியதாகும். சமீபத்திய அறிக்கைகளின்படியும் ஆதிதிராவிடர் பள்ளிச்சேர்க்கை அதிகரித்துள்ளதும். எழுத்தறிவு நிலை அதிகரித்துள்ளதும் இப்பிரிவினரிடையே கல்வியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதாகவே கூறலாம். இப்பிரிவினருக்கான அரசின் சலுகைகள் இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.

அட்டவணை-4 பெற்றோர்களின் தொழில்

வ.எண்.	தொழில்	ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	கூலி *(*விவசாயம், கொத்தனார், சித்தாள், ஆசாரி*)*	*32* *(25.39%)*	*40* *(31.75%)*	*72* *(57.14%)*
2.	அரசு வேலை	*1* *(0.79%)*	*2* *(1.59%)*	*3* *(2.38%)*
3.	வியாபாரம் *(*பால், கடலை, ஜவுளி, பூத்தொழில், காய்கறி*)*	*4* *(3.17%)*	*5* *(3.97%)*	*9* *(7.14%)*
4.	ஓட்டுநர் மற்றும் தனியார் நிறுவன ஊழியர்	*3* *(2.38%)*	*3* *(2.38%)*	*6* *(4.76%)*
5.	விவசாயம்	*19* *(15.08%)*	--	*19* *(15.08%)*
6.	மற்றவை	*9* *(7.14%)*	*8* *(6.35%)*	*17* *(13.49%)*
	மொத்தம்	*68*	*58*	*126(99.99%)*

அட்டவணை-*4*ல் இடைவிலகியவர்களது பெற்றோர்கள் செய்யும் தொழில் கொடுக்கப்பட்டுள்ளது. இடைவிலகியவர்களது பெற்றோர்களில் *57.14* சதவிகிதம்

கூலி வேலை பார்ப்பவர்களாகவும், *2.38* சதவிகிதம் அரசுப்பணியில் பணிபுரிவோராகவும், *7.14* சதவிகிதம் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோராகவும், *4.76* சதவிகிதம் தனியார் நிறுவன ஊழியர்களாகவும், *15.08* சதவிகிதம் விவசாயத்தில் ஈடுபட்டோராகவும், *13.49* சதவிகிதம் மற்ற தொழில்கள் செய்வோராகவும் உள்ளனர். இடைவிலகல்நேரிடும் மாணவர்களது பெற்றோர்கள் பெரும்பாலும் கூலிவேலை பார்ப்பவர்களாகவே உள்ளனர். போதிய வருமானமின்மை இக்குடும்பங்களில் இடைவிலகலை ஏற்படுத்துகிறது. கிராமத்தைக் காட்டிலும் நகரத்தில் இந்நிலை சற்று அதிகமாக உள்ளது. அடுத்த நிலையில் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட குடும்பங்களில் இடைவிலகல் அதிகமாக உள்ளது. இப்பெற்றோர்கள் குழந்தைகளைத் தமது விவசாயப் பணிக்கு உதவியாக இருப்பதற்காகப் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விடுகின்றனர்.

அட்டவணை-5 குடும்பவகை

வ.எண்.	குடும்பவகை	ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	தனிக்குடும்பம்	*18(14.29%)*	*38(30.15%)*	*56(44.44%)*
2.	கூட்டுக்குடும்பம்	*50(39.68%)*	*20(15.87%)*	*70(55.56%)*
	மொத்தம்	*68*	*58*	*126(100%)*

அட்டவணை-*5*ல் இடைவிலகியவர்களது குடும்பவகை பற்றிக் கூறப்படுகிறது. இடைவிலகியவர்களது குடும்பங்கள் *44.44* சதவிகிதம் தனிக் குடும்பவகையினையும், *55.56* சதவிகிதம் கூட்டுக் குடும்பவகையினையும் சார்ந்தவனவாகும். கூட்டுக்குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்குத்தான் தனிக்குடும்பத்தைக் காட்டிலும் இடைவிலகல் சிக்கல் மிகுதியாக ஏற்படுகிறது. பேராசிரியர் ஈசுவர ரெட்டியின் ஆய்வும் இதை உறுதிசெய்கிறது இவ் அட்டவணையிலிருந்து கிராமங்களில் கூட்டுக்குடும்பம் *(39.68%)* அதிகம் உள்ளதும், நகரங்களில் தனிக்குடும்பம் *(30.15%)* அதிகம் உள்ளதும் தெரிகின்றன. இந்நிலை பொதுநிலையோடு ஒக்குப்போகிறது.



50
40
30
20
10
0
சதவிகிதத்தில்
39.68%
30.15%
14.29%
15.87%
ஊரகம்
நகரம்
தனிக்குடும்பம்
கூட்டுக்குடும்பம்

அட்டவணை-6 குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை

வ.எண்.	குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை	ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	5க்கு கீழ் (1-5)	15 (11.90%)	36 (28.57%)	51 (40.48%)
2.	6ம் அதற்கு மேலும்	53 (40.06%)	22 (17.46%)	75 (59.52%)
	மொத்தம்	68	58	126 (100.00%)

இடைவிலகியவர்களது குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை அட்டவணை 6ல் கொடுக்கப்பட்டுள்ளது. 5க்குக் கீழ் உள்ள உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தினைச் சிறிய குடும்பம் என்றும் 6ம் அதற்கு மேல் உறுப்பினர் உள்ள குடும்பத்தினைப் பெரிய குடும்பம் என்றும் பிரிக்கலாம். இடைவிலகியர்களது குடும்பங்கள் பெரும்பாலும் பெரிய குடும்பங்களாகவே (59.52%) உள்ளன. 40.48 சதவிகித குடும்பங்கள் சிறிய குடும்பங்களாக உள்ளன. பெரிய குடும்பங்கள் கிராமங்களில் (42.06%) அதிகமாகவும், சிறிய குடும்பங்கள் நகரங்களில் (28.57%) அதிகமாகவும் இருப்பதாக இவ்வட்டவணை தெரிவிக்கிறது.

அட்டவணை-7 பெற்றோர்களின் கல்விநிலை

வ.எண்.	கல்விநிலை	ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்	30 (23.81%)	23 (18.25%)	53 (42.06%)
2.	5ம் வகுப்பு வரை படித்தவர்கள்	26 (20.63%)	14 (11.11%)	40 (31.75%)
3.	6 முதல் 8ம் வகுப்பு வரை படித்தவர்கள்	8 (6.35%)	12 (9.52%)	20 (15.87%)
4.	9 முதல் 10 ம் வகுப்பு வரை படித்தவர்கள்	4 (3.17%)	9 (7.14%)	13 (10.32%)
	மொத்தம்	68	58	126(100.00%)

இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர்களுடைய கல்வி நிலை பற்றி அட்டவணை-7 கூறுகிறது பெற்றோர்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 42.09 சதவிகிதமும், 5ம் வகுப்பு வரை படித்தவர்கள் 31.75 சதவிகிதமும், 6 முதல் 8 ம் வகுப்பு வரை படித்தவர்கள் 15.87 சதவிகிதமும், 9 முதல் 10 ம் வகுப்பு வரை படித்தவர்கள் 10.32 சதவிகிதமும் உள்ளனர். இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர்களில் 2/5 பகுதியினர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக உள்ளதையும், இவர்கள் கிராமத்தில் அதிகமாக உள்ளதையும் இவ்அட்டவணை புலப்படுத்துகிறது. ஆரம்பக் கல்விக்கு மேல் படித்துள்ளவர்கள் குறைவாகவே உள்ளனர். எனவே பெற்றோர்களின் எழுத்தறிவின்மையும், குறைவான கல்வியும் கூட இடைவிலகலுக்கு ஒரு காரணமாக அமையலாம்.

அட்டவணை-8 பெற்றோர்களின் ஆண்டு வருமானம்

வ.எண்.	வருமானம்	ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	ரூ. 0 - 11,000 வருடவருமானம் (வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள்)	68 (53.97%)	47 (37.30%)	115 (91.27%)
2.	ரூ. 11,000ம் அதற்கு மேலும் (வறுமைக்கோட்டிற்கு மேல் வருமானம் உள்ளவர்கள்)	--	11 (8.73%)	11 (8.73%)
	மொத்தம்	68	58	26(100.00%)

அட்டவணை-8ன் படி இடைவிலகிய பெற்றோர்களில் வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் 91.27 சதவிகிதமும், வறுமைக் கோட்டிற்கு மேல் வருமானம் உள்ளவர்கள் 8.73 சதவிகிதமும் இருப்பது தெரிகிறது. கிராமப்பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் அதிகம் இருப்பதுவும் தெரிகிறது. எனவே வருமானக்குறைவும் இடைவிலகலுக்கு முக்கிய காரணமாக அமையலாம்.

நோக்கீட்டு நூல்

1. The out of School Youth, V.E. Reddy & K.S. Bhat, Sterling Publishers Pvt.. Ltd., New Delhi, 1977.

5. இடைவிலகலுக்கான காரணங்கள்

நம்நாடு சுதந்திரம் பெற்றபின், அரசு, கல்வியை முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டது. அப்போதைய கல்வி அமைச்சர் திரு. மௌலான ஆசாத் *(1948)* இதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். ஆரம்பக் கல்விக்கான பாடத்திட்டங்கள், பாடமுறை போன்றவை வரையறுக்கப்பட்டன. கல்வி வளர்ச்சிக்கு நிதி ஒதுக்குவதற்கான வழிமுறைகளுக்காக கெர் குழு (Kher Committee) *1948*-ல் அமைக்கப்பட்டது. ஏற்கனவே கண்டவாறு *1950* ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில், *6 - 14* வயதிற்குள்ளான சிறுவர்களுக்கு இலவச, கட்டாயக் கல்வி அளிக்க சரத்து ஏற்படுத்தப்பட்டது. *1956* ல் திட்டக்குழுவின் கல்விப் பரிவின் ஜே. பி. நாயக் என்பவர் தலைமையிலான குழுவும் இலவச, கட்டாயக் கல்வியை வலியுறுத்தியது. ஐந்தாண்டுத் திட்டங்களின் வழி கல்விக்கு அதிக நிதி செலவிடப்பட்டு வருகிறது. ஆரம்பக்கல்வியை முன்னேற்ற பல குழுக்களும் அவ்வப்போது அமைக்கப்பெற்று, மாணவர்களுக்குப் பல சலுகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் பயனாய், பள்ளி செல்லும் மாணவர்கள் இடையில் நின்றுவிடும் அளவு குறைந்திடும்போக்கு ஏற்பட்டுள்ளது என்றாலும், அவை தொடர்ந்து இன்னும் பெரிய அளவில் நிகழ்ந்து வருவதால் அந்தப் பிரச்சனை சிக்கல் நிறைந்ததாக ஆகிவருகிறது. எனவே இதற்கான காரணங்களை அறிய வேண்டியுள்ளது.

மாணவர்களின் பள்ளி இடைவிலகலுக்கு அவர்கள் வருமானத்திற்காக வேலையில் பங்கெடுத்தல், போதிய வருமானமின்மை, கல்வியினைத் தொடர ஆர்வமின்மை, பெற்றோர்க்கு வேலையில் உதவி, வகுப்புத்தேர்வில் தோல்வி, ஊனம் மற்றும் உடல்நலமின்மை, இளைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுதல், பெற்றோர்களிடம் ஊககுவிப்புத் தன்மை இல்லாமை போன்ற காரணங்கள் முக்கியமாக அறியப்பட்டு உள்ளன. இவைகளைப் பின்வரும் அட்டவணை தெளிவாக விளக்குகிறது.

அட்டவணை-9 இடைவிலகலுக்கான காரணங்கள்

வ.எண்.	காரணங்கள்	தகவலாளிகள் ஊரகம்	நகரம்	மொத்தம்
1.	பொருளாதாரக் காரணங்கள் (பெற்றோரின் குறைந்த வருமானம், குடும்ப வருமானத்தை அதிகரிக்கச் சிறிய வயதிலேயே வேலைக்குச் செல்லுதல்)	23 (18.25%)	19 (15.08%)	42 (33.35%)
2.	பள்ளிப்படிப்பில் ஆர்வமின்மை (படிப்பில் ஆர்வமின்மை, வகுப்புத் தேர்வில் தோல்வி, பாடங்களை விரும்பாமை போன்றவை)	17 (13.49%)	16 (12.7%)	33 (26.19%)
3.	உடல்நலக்குறைவு (ஊனம் மற்றும் உடல் நலம் பாதிப்பு)	11 (8.73%)	7 (5.56%)	18 (14.29%)
4.	பள்ளிக்குச் செல்வதைப் பெற்றோர் ஊக்குவிக்காமை	8 (6.35%)	7 (5.56%)	15 (11.90%)
5.	இளைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுதல்	4 (3.17%)	2 (1.59%)	6 (4.76%)
6.	பெற்றோர்கள் தமது உறைவிடத்தை வேறு ஊருக்கு மாற்றிக் கொள்ளுதல்	1 (0.79%)	5 (3.97%)	6 (4.76%)
7.	பெற்றோர் வேலைக்கு உதவுதல்	2 (1.59%)	1 (0.79%)	3 (2.38%)
8.	மற்ற காரணங்கள் (பெண்கள் பூப்பெய்தியவுடன் நிறுத்திவிடுவது, தாய் தந்தை இறப்பு போன்றவை)	2 (1.59%)	1 (0.79%)	3 (2.38%)
	மொத்தம்	68	58	126(99.99%)

பொருளாதாரக் காரணங்கள்

பெற்றோரின் குறைந்த வருமானம், குடும்ப வருமானத்தை அதிகரிக்க

சிறிய வயதிலேயே குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல் போன்ற பொருளாதாரக் காரணங்களே *(33.33 சதவிகிதம்)* மாணவர்களின் இடைவிலகலுக்கு முக்கிய காரணமாகவும் முதல் காரணமாகவும் அமைவது இவ் ஆய்வில் தெரியவருகிறது. பெரும்பாலான பெற்றோர் கூலிகளாக உள்ளது இதற்குக் காரணமாகும். மால்கம் ஆதிசேசய்யாவும் *(1990)*, பள்ளியை விட்டு மாணவர்கள் வெளியேறுவதற்கும் வகுப்புகளுக்குச் செல்லாமல் இருப்பதற்கும் வறுமைதான் பிரதான காரணம் என்கிறார். இது நகரப்பகுதிகளுக்கும் பொருந்தும் என்கிறார். இவ் ஆய்வின் மூலம் இடைவிலகலுக்கான பொருளாதாரச் காரணங்களில் நகர *(15.08%)* மற்றும் கிராமங்களுக்கிடையே *(18.25%)* பெரிய வேறுபாடு இல்லை எனத் தெரிய வருகிறது. வசிஸ்ட் என்ற அறிஞரும் `Drop-out problem in Education' என்ற கட்டுரையில் *(யோசனா, 1989)* ஏழ்மையான பெற்றோரின் *9-10* வயதிலான பள்ளிக்குழந்தைகள் முதலாளிகளின் மாடுகளை மேய்ப்பதற்கு அனுப்பப்படுவதாகக் குறிப்பிடுகிறார்.

பள்ளிப் படிப்பில் ஆர்வமின்மை (கல்விக் காரணங்கள்)

படிப்பில் ஆர்வமின்மை, வகுப்புத் தேர்வில் தோல்வி, பாடங்களை விரும்பாமை போன்ற பள்ளிசார்ந்த கல்விக்காரணங்கள் *(26.19%)* பள்ளி மாணவர்களின் இடைவிலகலுக்கு இரண்டாவது முக்கிய காரணமாக இருப்பது இவ் ஆய்வில் தெரிகிறது. நகர *(12.7%)* கிராம *(13.49%)* அளவில் ஒப்பிடுகையில் இக்காரணத்தில் பெரிய வேறுபாடு தெரியவில்லை. பேராசிரியர் ராமகிருஷ்ணன் தன் ஆய்வில் குழந்தைகள் பள்ளியை வெறுப்பதும் கல்வி தடைப்படுவதற்கு ஒரு அடிப்படைக் காரணம் என்கிறார். ஜோசப் மாலியகான் என்ற அறிஞர் நர்சி மொஞ்சி என்ற மேலாண்மை நிறுவனம் *(மும்பை)* நடத்திய ஆய்வினை மேற்கோள்காட்டி மாணவர்களின் இடைவிலகலுக்குக் கல்வி சார்ந்த காரணங்களே பிரதானமாக உள்ளதாக தமது கட்டுரையில் குறிப்பிடுகிறார். கடினமான பாடத்திட்டங்கள், தேர்வில் தோல்வி, பாடச்சுமை போன்றவைகள் இதில் அடங்கும். *1989* தேசியப் புள்ளி விவர அறிக்கையும் *(நெ.365)* இடைவிலகலுக்குக் கல்வி கற்க ஆர்வமின்மை *(கிராமம் 26.26%)*, நகரம் *(25.60%)* என்ற காரணம் பிரதானமாக உள்ளதைக் குறிப்பிடுகிறது.

உடல் நலக் குறைவு

மாணவர்களுக்கு ஏற்படுகின்ற உடல்நலக்குறைவு, ஊனம் போன்றவைகள் அவர்களின் இடைவிலகலுக்கு மூன்றாவது காரணமாக உள்ளதை *(14.29%)* இவ் ஆய்வு உணர்த்துகிறது. நகர *(5.56%)*, கிராம *(8.73%)* அளவில் ஒப்பிடுகையில் இக்காரணத்தில் பெரிய வேறுபாடு இல்லை. மக்கள் தொகைப் பெருக்கம் அதிகரித்துக் கொண்டே போவதால் அனைவருக்கும் போதுமான மருத்துவ வசதி செய்ய இயலவில்லை என்பதுவும் இங்கு பொருந்தும்.

பள்ளிக்குச் செல்வதைப் பெற்றோர் ஊக்கப் படுத்துவதில்லை

இடைவிலகும் மாணவர்களது பெற்றோர்கள் கல்வியின் அவசியம்

உணர்ந்து தமது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப ஊக்கப்படுத்துவதில்லை. இவ் ஆய்விலும், *11.90* சதவிகிதத்தினர் பள்ளிக்கு அனுப்ப தமது குழந்தைகளை ஊக்கப்படுத்துவதில்லை என்பது தெரிகிறது. ஏற்கனவே இவ் ஆய்வில் கண்டவாறு குழந்தைகளின் பெற்றோர் எழுத்தறிவு பெறாதவர்களாக அதிக அளவில் இருப்பதால் இந்நிலை ஏற்படுவதாகக் கூறலாம். கிராம *(6.35%)*, நகர *(5.56%)* அளவில் இவ்ஆய்வில் ஒரே நிலையே காணப்படுகிறது.

இளைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுதல்

வீட்டில் சிறு குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்ததால் *4.76* சதவிகிதத்தினரின் பள்ளிப்படிப்பு தமது பெற்றோர்களால் நிறுத்தப்பட்டு விட்டதாக இவ்ஆய்வில் தெரிவித்தனர். இதில் நகர *(1.59%)* , கிராம *(3.17%)* அளவில் பெரிய வேறுபாடு ஒன்றும் இல்லை.

பெற்றோர்கள் தமது உறைவிடத்தை வேறு ஊருக்கு மாற்றுதல்

பெற்றோர்கள் வேலை தேடித் தாம் வசிக்கின்ற ஊரினைவிட்டு வெளியேறி, வேறு ஊரில் குடியேறுவதும், மாணவர்களின் இடைவிலகலுக்குக் காரணமாக அமைகிறது. *4.76* சதவிகிதம் பேர் இக்காரணத்தால் இடைவிலக நேரிட்டதை இவ் ஆய்வு தெரிவிக்கிறது. ஏற்கனவே இவ் ஆய்வில் கண்டவாறு மாணவர்களின் பெற்றோரில் பெரும்பாலோர் கூலி வேலை பார்ப்பதால் இது நேரிட வாய்ப்பாகக் கருதலாம். கிராமத்தைக் காட்டிலும் *(0.79%)* நகரத்தில் *(3.97%)* இது சற்று அதிகமாக உள்ளது.

பெற்றோர் வேலைக்கு உதவியாக இருத்தல்

நோய்வாய்ப்பட்டுள்ள சில பெற்றோர் தாம் செய்கின்ற தொழில் தங்களுக்கு உதவியாக இருக்கத் தங்களது பள்ளி செல்லும் குழந்தைகளை நிறுத்தி விடுகின்றனர். இவ் ஆய்விலும், *2.38* சதவிகிதத்தினர் இக்காரணத்திற்காக *(கிராமம் 1.59, நகரம் 0.79 சதவிகிதம்)* தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்குச் செல்லாமல் நிறுத்திவிடுவது தெரிகிறது.

மற்ற காரணங்கள்

பெண் குழந்தைகள் பூபெய்திவிடுவதாலும், சில நேரங்களில் பெற்றோர் இறந்துவிடுவதாலும், *2.38* சதவிகித இடைவிலகல் ஏற்படுவதையும் இவ்ஆய்வு விவரிக்கிறது.

இடை விலகும் மாணவர்களின் கல்வி உணர்வுகள் (Attitudes)

ஒரு சில சிறிய காரணங்களைத்தவிர பெரும்பாலான இடைவிலகலுக்கான காரணங்கள் மாணவர்களால் ஏற்படுவது இல்லை. குடும்பச் சூழலும், பள்ளிச் சூழலுமே மாணவர்களின் இடைவிலகல் நிகழ்விற்கு பிரதான காரணங்களாக

உள்ளன. இதற்கு அதிகமாக மாணவர்கள் காரணமாக இல்லாததால், இம்மாணவர்கள் கல்வியின் பயன்களை உணர்ந்துள்ளார்களா? மேலும் தற்போது படிக்க விரும்புகிறார்களா? எம்மாதிரியான முறையில் அவர்கள் சேர்ந்து படிக்க விரும்புகிறார்கள்? போன்றவற்றையும் ஆய்வு செய்வது அவசியமாகிறது. எனவே இதற்கான முயற்சியும் இவ் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டது. இனி இதன் விவரங்களை விரிவாகக் காண்போம்.

அட்டவணை-10 கல்வியின் பயன்கள் தெரியுமா?

வ.எண்.	விவரம்	தகவலாளிகள்
1.	ஆம்	76 (60.32%)
2.	இல்லை	50 (39.68%)
	மொத்தம்	126 (100.00%)

அட்டவணை 10-லிருந்து 60.32 சதவிகித இடைவிலகிய மாணவர்கள் கல்வியின் பயனை உணர்ந்துள்ளது தெரியவருகிறது. இதிலிருந்து இடைவிலகலுக்கு இவர்கள் பிரதான காரணமாக அமைவதில்லை என்பதை உணரமுடிகிறது.

அட்டவணை-11 ஆம், எனில் கல்வியின் பயன்கள் எவை?

வ.எண்.	பயன்கள்	தகவலாளிகள்
1.	வேலைவாய்ப்பு ஏற்படும்	45 (59.21%)
2.	சமூக அந்தஸ்து உயரும்	14 (18.42%)
3.	அறிவை வளர்க்க உதவும்	10 (13.16%)
4.	மற்றவை	7 (9.21%)
	மொத்தம்	76 (100.00%)

கல்வியினால் பயன்கள் உண்டு என்று பதிலளித்த 76 இடைவிலகிய மாணவர்களிடம் மட்டும் அப்பயன்கள் யாவை? எனக் கேட்கப்பட்டது. அவர்கள் கூறிய பயன்கள் அட்டவணை-11ல் விவரிக்கப்பட்டுள்ளன. 59.21 சதவிகிதம் பேர் கல்வியினால் வேலை வாய்ப்பு ஏற்படும் என்றும், 18.42 சதவிகிதம் பேர் சமூக அந்தஸ்து உயரும் என்றும், 13.16 சதவிகிதம் பேர் அறிவை வளர்க்கக் கல்வி உதவும் என்றும் 9.21 சதவிகிதம் பேர் மேற்கண்டவையின்றி மற்ற வகையிலும் கல்வி பயனளிக்கும் என்றும் பதிலளித்தனர். கல்வியினால் அதிக அளவில் வேலை வாய்ப்பு ஏற்படும் என்பதே இவர்களில் பெரும்பாலோர் கருத்தாகும்.

அட்டவணை-12 தற்போது வாய்ப்பு அளித்தால் படிக்க விரும்புகிறீர்களா?

வ.எண்.	விவரம்	தகவலாளிகள்		
		ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
1.	ஆம்	15 (11.90%)	34 (26.98%)	49 (38.89%)
2.	இல்லை	63 (50.00%)	14 (11.11%)	77 (61.11%)
	மொத்தம்	78	48	126 (99.99%)

இடைவிலகியவர்களுக்குத தற்போது படிக்க வாய்ப்பளித்தால் படிக்க விரும்புகிறவர் விவரம் அறிய வினவப்பட்டது. அட்டவணை-12ன்படி இனி படிக்க விரும்புவோர் சுமார் 40 சதவிகிதம் மட்டுமே என்பது தெரிகிறது ஆண்களைக் காட்டிலும் பெண்களிடம் இனி கற்க ஆர்வம் அதிகம் இருப்பதுவும் தெரிகிறது (ஆண்கள் 11.90%, பெண்கள் 26.98%)

அட்டவணை-13 ஆம், எனில் எம்மாதிரியான முறையில் படிக்க விரும்புகிறீர்கள்?

வ. எண்.	விவரம்	தகவலாளிகள்
1.	பள்ளிகள்	18 (36.73%)
2.	முதியோர் கல்வி நிலையம்	20 (40.82%)
3.	தனியாரிடம் கற்றல்	11 (22.45%)
	மொத்தம்	49 (100.00%)

இனி படிக்க விரும்பும் 49 நபர்களிடம், எம்மாதிரியான முறையில் படிக்க விரும்புகிறீர்கள் என வினவியபோது அவர்கள் கூறியவை அட்டவணை -13 ல் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. 36.73 சதவிகிதம்பேர் பள்ளிகளில் மீண்டும் சேர்ந்து படிக்கவும், 40.82 சதவிகிதம்பேர் முதியோர் கல்வி நிலையங்களில் படிக்கவும், 22.45 சதவிகிதம்பேர் தனியாகப் படித்துக்கொள்ளவும் விரும்புவதை இவ்ஆய்வு விளக்குகிறது. எனவே முதியோர் கல்விநிலையங்களும் நம் நாட்டில் நிலையான ஒன்றாக ஏற்படுத்தப்படவேண்டும்.

நோக்கீட்டு நூல்கள்

1. வறுமையும் எழுத்தறிவும், எஸ். ஆதிசேசய்யா, மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலம், சென்னை-20.
2. எல்லோருக்கும் கல்வி, மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலம், சென்னை-20, அக்டோபர், 1993.
3. பகல்கனவு, கிஜுபாய் பகேக, சவுத் ஏசியன் புக்ஸ் வெளியீடு, சென்னை-2, 1993.
4. Drop-out Problem in Education, Vashist P.D, Yojana, November 1 - 15, 1989.
5. Reason for Drop- Out more academic, Joseph Maliakan, IAEA Newsletter, Vol.XVIII, No.1, April, 1996.

6. பள்ளிச் சூழல் - ஆய்வு அனுபவ மதிப்பீடு

பள்ளியை ஆர்வமூட்டும் இடமாக மாற்றுவது இன்றியமையாததாகும். ஏழ்மை நிறைந்த நம் நாட்டில் மாணவர்கள் தத்தம் இல்லங்களிலிருந்து மகிழ்ச்சியாகப் பள்ளிக்கு வருகிறார்கள் என்று சொல்ல முடியாது. *52* சதவிகித மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். பெற்றோர்கள் பெரும்பாலும் *(48%)* எழுத்தறிவற்றவர்களாகவே வாழ்வதால் அவர்களாலும் தங்கள் குழந்தைகளுக்கு கற்பதில் உதவ முடியாது. அதே நேரத்தில் இன்றைய மாணவர்கள்தான் இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகிறார்கள். அறிஞர் கோத்தாரி தலைமையில் அமைந்த தேசியக் கல்விக் குழுவும் இந்தியாவின் எதிர்காலம் அதன் வகுப்பறையில் நிர்ணயிக்கப்படுகிறது என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. எனவே பள்ளிச் சூழல் மாணவர்களுக்கு நன்முறையில் அமையப்பெறவேண்டும். ஆய்வாளர், இடைவிலகியவர் விவரம் பெறப் பள்ளிக்குச் சென்றிருந்தபோது ஏற்பட்ட களஅனுபவ அடிப்படையில் இவ் அத்தியாயத்தில் சில செய்திகள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி, ஆதிதிராவிடர் பள்ளி என்ற அடிப்படையில் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகள் ஆகிய *10* பள்ளிகள் தஞ்சை நகர, ஊரகப் பகுதிகளில் பார்வையிடப்பட்டன. அனைத்துப் பள்ளிகளிலுமே அரசின் சலுகைகளான மதிய சத்துணவுத்திட்டம், இலவச சீருடை, காலணி, ஆதிதிராவிடர்களுக்கான இலவச நோட்டுப் புத்தகங்க்ள் வழங்கும் திட்டம் ஆகியன விரிவுபடுத்தப்பட்டுள்ளன. சில பள்ளிகளில் ஊனமுற்றோர்களுக்கான ஸ்டைபண்ட் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவைகளில் அனைத்து மாணவர்களும், குறிப்பாக ஏழ்மையில் உளள மாணவர்கள் அதிகமாகப் பயன் பெறுகிறார்கள். இலவச பேருந்து வசதி எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களினால் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளதாகவே கூறப்படுகிறது.

மாணவர்களில் இடைவிலகியவர்களைத் திரும்பவும் பள்ளிக்குக் கொண்டுவர, பள்ளியின் கடைநிலை ஊழியர்கள், ஆயா ஆகியோரை அம்மாணவர்களின் வீட்டிற்கு அனுப்பிச் சில பள்ளிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதி அம்மாணவர்களைப் பள்ளிக்கு அனுப்பவும் சில பள்ளிகளில் முயற்சிகள் நடைபெறுகின்றன. பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் இப்பணியில் ஈடுபடுகின்றன. இருந்தாலும் இவை எல்லாப் பள்ளிகளிலும் இல்லை. அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில்தான் இடைவிலகல் அதிகமாக உள்ளது.

விளையாட்டுத்திடல் பொதுவாக எல்லாப் பள்ளிகளிலுமே உள்ளது. மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள், கட்டுரை, கலை நிகழ்ச்சிப் போட்டிகள் எல்லாம் அனைத்துப் பள்ளிகளிலுமே நடைபெறத்தான் செய்கின்றன. தன்னார்வத் தொண்டுப் பணிகளிலும் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இவை எல்லாம் சிறப்பாக இருந்தாலும், மாணவர்களுக்குப் போதிக்கும் முறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை. பயிற்று முறைகள் வெறும் வாய்மொழி விளக்க முறையாகவே உள்ளன. சொல்லித் தெரியவைப்பதைவிட முயற்சி செய்வதைப் பாராட்டி உற்சாகம் தருவதாகக் கற்பிக்கும் முறையினை மாற்றியமைக்கலாம். பாடத்திட்டங்களில் பெரும்பாலும் பழைமை பற்றியே பேசப்படுகின்றன. இவைகள் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றியமைக்கப் படவில்லை.

அரசுப் பள்ளிகளில் போதிய அளவில் கழிப்பிட வசதி இல்லை. குடிதண்ணீர் வசதியும், கட்டிட வசதியும் குறைவாகவே உள்ளன.

ஆதிதிராவிடர் பள்ளிகளும் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியடைந்ததாகத் தெரியவில்லை. அவைகளிலும் கட்டிட வசதி, குடிதண்ணீர் வசதி சிக்கல்கள் இருக்கின்றன.

ஆசிரியர்களுக்கும் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் அடிக்கடி நடைபெறுவதுவும் குறைவாகவே உள்ளது. இதனால் அவர்களுக்குப் பாடங்களில் புதிய செய்திகளைக்கூறவும், பாடம் பயிற்றுமுறையில் புதிய உத்திகளைக் கையாளவும் வாய்ப்பு குறைவாக உள்ளது.

7. முடிவுகளின் தொகுப்பு

கல்வி ஒருநாட்டின் அடித்தளக் கட்டமைப்பிற்கு ஒப்பானது. ஒருமனிதன் சரியாகச் செயல்பட்டுத் தன் வாழ்வில் முன்னேற அவனது அறிவு வளர்ச்சி செம்மையாக இருத்தல் வேண்டும். அதுபோல ஒருநாடு சரியாகச் செயல்பட்டுப் பொதுவாழ்வில் முன்னேற நாட்டின் கல்வி வளர்ச்சி முழுமையாக இருக்கவேண்டும். எந்த ஒரு நாட்டில் கல்வி வளர்ச்சியடைந்துள்ளதோ அந்நாட்டில் அனைத்து வளர்ச்சிகளையும் காணலாம். இதனை உணர்ந்த அரசு, சுதந்திரம் அடைந்தபின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க முன்வந்தது. *6 - 14* வயதுடைய சிறுவர்கள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளித்தாக வேண்டும் என அரசியல் அமைப்புச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. *15 - 35* வயதுடையவர்களுக்கும் எழுத்தறிவுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ் ஆண்டுக்கு *(1996 - 97)* மட்டும் நடுவண் அரசு ரூ. *3,350* கோடியும், தமிழக அரசு ரூ.*2,400* கோடியும் ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவைகளினால், சுதந்திரம் பெற்றபோது இருந்த *16* சதவிகித எழுத்தறிவுநிலை இன்று *52* சதவிகிதமாக உயர்ந்துள்ளது. பள்ளி இடைவிலகலும் குறைந்துவந்தாலும், இன்றும் அது அதிக அளவிலேயே உள்ளது. ஓரளவு கற்ற இவர்கள் காலப் போக்கில் இதையும் மறந்து எழுத்தறிவற்றவர்களாகிவிட வாய்ப்புள்ளது. எனவே இச்சிக்கலுக்குரிய காரணங்களை அறிய இவ்வாய்வு தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. இவ்ஆய்வில் பள்ளியிலிருந்து இடைவிலகிய *126* நபர்கள் தகவலாளிகளாக அமையப்பெற்றனர். முந்தைய அத்தியாயங்களில் விவாதிக்கப்பட்டவிவர முடிவுகளின் சுருக்கங்கள் இங்கு தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இனி இவற்றைக் காணலாம்.

இடைவிலகியவர்களது சமூகப் பொருளாதாரநிலை

மாணவர்களின் பள்ளி இடைவிலகலுக்கும் அவர்களது சமூகப் பொருளாதாரநிலை, குடும்பநிலை ஆகியவற்றிற்கும் தொடர்பு இருப்பதை இவ்வாய்வு உணர்த்துகிறது.

பால் (இனம்)

இடைவிலகியவர்களில் அதிகம்பேர் *(62%)* ஆண்களாக உள்ளனர். *38* சதவிகிதம் பெண்களும் பள்ளியிலிருந்து இடைவிலகியுள்ளனர். இவர்களில் *54* சதவிகிதம் ஊரகப் பகுதியிலும், *46* சதவிகிதம் நகரப்பகுதியிலும் உள்ளனர். ஊரக நகர அளவில், ஒப்பிடும்போது பெண்களிடையே வேறுபாடு இல்லாவிட்டாலும், ஆண்களிடையே நகரத்தைக் *(26.19%)* காட்டிலும் ஊரகப் பகுதியில் *(35.71%)* அதிகமாக இடைவிலகல் ஏற்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம் விவசாயம் சார்ந்ததாக உள்ளதால் இவ்இடைவிலகல் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது,

மதம

இடைவிலகியவர்களில் மற்ற மதத்தினரைக் *'34.13%)* காட்டிலும் இந்துக்களே *(65.87%)* அதிகமாக உள்ளனர் இவர்கள் நகரப்பகுதியைக் காட்டிலும் கிராமங்களில் அதிகம் உள்ளனர்.

சாதி

இடைவிலகியவர்களில் பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் *71.43* சதவிகிதமும், ஆதிதிராவிடர் *23.81* சதவிகிதமும், மற்றவர்கள் *4.76* சதவிகிதமும் உள்ளனர். பிற்பட்ட மறறும் மிகவம பிற்பட்ட வகுப்பினர் கிராம நகர அளவில் சமமாகவும், ஆதிதிராவிடர் நகரத்தைக் காட்டிலும் கிராமத்தில் அதிகமாகவும் உள்ளனர்.

பெற்றோர்களின் தொழில்

இடைவிலகியவர்களது பெற்றோர்களில் *57.14* சதவிகிதம் கூலிவேலை பார்ப்பவர்களாகவும், *2.38* சதவிகிதம் அரசுப்பணி புரிவோராகவும், *7.14* சதவிகிதம் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளோராகவும், *4.76* சதவிகிதம் தனியார் நிறுவன ஊழியர்களாகவும், *15.08* சதவிகிதம் விவசாயத்தில் ஈடுபட்டோராகவும், *13.49* சதவிகிதம் மேற்கண்டவைத் தவிர்த்த மற்ற தொழில்கள் செய்வோராகவும் உள்ளனர்

குடும்பம்

இடைவிலகியவர்களது குடும்பங்கள் *44.44* சதவிகிதம் தனிக் குடும்பத்தினையும், *55.56* சதவிகிதம் கூட்டுக்குடும்பத்தினையும் சார்ந்ததாகும். கிராமங்களில் கூட்டுக்குடும்பம் அதிகமாகவும், நகரங்களில் தனிக் குடும்பம் அதிகமாகவும் உள்ளன. கூட்டுக்குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்குத்தான் தனிக்குடும்பத்தைக் காட்டிலும் இடைவிலகல் மிகுதியாக ஏற்படுகிறது.

குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை

இடைவிலகியவர்களது குடும்பங்கள் பெரும்பாலும் பெரிய குடும்பங்களாகவே *(59.52%)* உள்ளன. சிறிய குடும்பங்கள் *40.48* சதவிகித

அளவில் உள்ளன. பெரிய குடும்பங்கள் கிராமங்களில் அதிகமாகவும், சிறிய குடும்பங்கள் நகரங்களில் அதிகமாகவும் இருக்கின்றன.

பெற்றோர்களின் கல்விநிலை

பெற்றோர்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் *42.06* சதவிகிதமும், *5* ஆம் வகுப்புவரை படித்தவர்கள் *31.75* சதவிகிதமும், *6* முதல் *8* ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் *15.87* சதவிகிதமும், *9* முதல் *10* ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் *10.32* சதவிகிதமும் உள்ளனர். ஆரம்பக் கல்விக்கு மேல் படித்தவர்கள் குறைவாகவே உள்ளனர். பெற்றோர்களின் எழுத்தறிவின்மையும், குறைவான கல்வியும் கூட இடைவிலகலுக்குக் காரணமாக அமைகின்றன.

பெற்றோர்களின் ஆண்டு வருமானம்

இடைவிலகிய பெற்றோர்களில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் *91.27* சதவிகிதமும், வறுமைக்கோட்டிற்குமேல் வருமானம் உள்ளவர்கள் *8.73* சதவிகிதமும் ஆகும். கிராமப்பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் அதிகமாக இருக்கின்றனர்.

இடைவிலகலுக்கான காரணங்கள்

பொருளாதாரக் காரணங்கள்

பெற்றோரின் குறைந்த வருமானம், குடும்ப வருமானத்தை அதிகரிக்கச் சிறிய வயதிலேயே குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல் போன்ற பொருளாதாரக் காரணங்களே *(33.33%)* இடைவிலகலுக்கு முக்கிய காரணமாகவும், முதற்காரணமாகவும் அமைகின்றன. இதன் நிலையில் நகர, கிராமங்களிடையே பெரிய வேறுபாடு இல்லை.

பள்ளிப் படிப்பில் ஆர்வமின்மை (கல்விக் காரணங்கள்)

படிப்பில் ஆர்வமின்மை, வகுப்புத் தேர்வில் தோல்வி, பாடங்களில் விருப்பமின்மை போன்ற பள்ளிசார்ந்த கல்விக் காரணங்கள் *(26.19%)* பள்ளி மாணவர்களின் இடைவிலகலுக்கு இரண்டாவது முக்கிய காரணமாகும். நகர, கிராம நிலையில் இதில் பெரிய வேறுபாடு இல்லை.

உடல் நலக் குறைவு

மாணவர்களுக்கு ஏற்படுகின்ற உடல்நலக் குறைவு, ஊனம் போன்றவைகள் அவர்களின் இடைவிலகலுக்கு மூன்றாவது காரணமாக *(14.29%)* உள்ளது. நகர, கிராம நிலையில் இதில் பெரிய வேறுபாடு இல்லை.

பள்ளிக்குச் செல்வதைப் பெற்றோர் ஊக்கப்படுத்துவதில்லை

11.90 சதவிகித பெற்றோர் தமது குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதை ஊக்கப்படுத்துவதில்லை. இதன் நகர, கிராம நிலை ஒரே அளவிலேயே காணப்படுகிறது.

இளைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுதல்

4.76 சதவிகித இடைவிலகியவர்களின் பெற்றோர்கள் இளைய குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டி இவர்களின் பள்ளிப் படிப்பை நிறுத்தியுள்ளனர். நகர, கிராம அளவில் இதில் பெரிய வேறுபாடு ஒன்றுமில்லை.

பெற்றோர்கள் தமது உறைவிடத்தை வேறு ஊருக்கு மாற்றுதல்

பெற்றோர்கள் வேலைதேடி வசிக்கின்ற இடத்தைவிட்டு வேறு இடம் செல்வதால் *4.76* சதவிகிதம் பேர் இடைவிலகலாகி விடுகின்றனர். கிராமத்தைக் காட்டிலும் நகரத்தில் இது சற்று அதிகமாக உள்ளது.

பெற்றோர் வேலைக்கு உதவியாக இருத்தல்

2.38 சதவிகிதம்பேர், பெற்றோர் வேலையில் உதவியாக இருக்க வேண்டிப் பள்ளிபடிப்பை நிறுத்திவிடுகின்றனர். கிராம நிலையில் பாதி அளவிற்கு நகரத்தில் இந்நிலை உள்ளது *(2:1* என்ற விகித அளவில்*)*

மற்ற காரணங்கள்

2.38 சதவிகித இடைவிலகல் பூப்பெய்தல், பெற்றோர் இறந்துவிடுதல் போன்ற காரணங்களால் ஏற்படுகிறது.

இடைவிலகும் மாணவர்களின் கல்வி உணர்வுகள் **(Attitudes)**

60.32 சதவிகித இடைவிலகிய மாணவர்கள் கல்வியின் பயனை உணர்ந்துள்ளனர். கல்வியினால் பயன்கள் உண்டு என்று உணர்பவர்களில், *59.21* சதவிகிதம்பேர் கல்வியினால் வேலை வாய்ப்பு ஏற்படும் என்றும், *18.42* சதவிகிதம் பேர் சமூக அந்தஸ்து உயரும் என்றும் *13.16* சதவிகிதம் பேர் அறிவை வளர்க்கக் கல்வி உதவும் என்றும், *9.21* சதவிகிதம்பேர் கல்வியினால் இன்னும் வேறு பயன்களும் ஏற்படும் என்றும் கூறுகின்றனர்.

இனி படிக்க வாய்ப்பு அமைந்தால் சுமார் *40* சதவிகிதம் பேர் படிக்க விரும்புவதாகக் கூறியுள்ளனர். ஆண்களைக் *(11.90%)* காட்டிலும் பெண்களிடம் *(26.98%)* இனிக் கற்பதில் ஆர்வம் அதிகமாக உள்ளது.

36.73 சதவிகிதம் பேர் இனி பள்ளிகளில் திரும்பச் சேர்ந்து படிக்கவும், *40.82* சதவிகிதம்பேர் முதியோர்கல்வி நிலையங்களில் படிக்கவும், *22.45* சதவிகிதம்பேர் தனியாகப் (Tution) படித்துக் கொள்ளவும் விரும்புகின்றனர்.

முடிவுரை

பள்ளி மாணவர்களின் இடைவிலகல் எனும் சிக்கல் தொடர்ந்து இருப்பதால் இதற்குரிய காரணங்கள் ஆராயப்பட்டன. பெற்றோர்களிடம் போதிய வருமானமில்லாத வறுமைநிலை நீடிப்பதால் அதிகம்பேர் பள்ளியிலிருந்து இடைவிலக நேரிடுவதை இவ் ஆய்வின் முடிவுகள் தெளிவாக உணர்த்துகின்றன.

அத்த நிலையிலே கல்விசார்ந்த காரணங்களும் இடைவிலகலுக்கு முக்கியமானவையாக அமைவதை இவ் ஆய்வு முடிவு செய்கிறது. பள்ளி மாணவர்களின் இடைவிலகலுக்கும் அவர்களது குடும்ப, சமூகப் பொருளாதார நிலைகளுக்கும் உறவு உள்ளது என்பதையும் இவ்ஆய்வு தெரிவிக்கிறது.

பரிந்துரைகள்

கல்வியாளர் வெங்கடசுப்பிரமணியன் குறிப்பிடுவதுபோன்று, இடைவிலகலுக்கு வறுமைதான் முக்கியக் காரணம் எனினும் வறுமையை முற்றிலும் நாம் ஒழிக்க முடியாது என்பதால் பள்ளிக் கல்வியிலேயே வேலைவாய்ப்புப் பெறும் வகையில் தேவையான பாடத்திட்டங்களும், வகுப்புகளும் இடம்பெற்றால் மாணவர்களின் இடைவிலகல் பிரச்சனையோடு ஓரளவ வறுமைச்சிக்கலும் தீரும்.

பள்ளிகளின் . பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும். இவை அன்றாட வாழ்விற்குத் தேவையானதாகவும், பொருந்துபவையாகவும் அமைக்கப்படவேண்டும்.

பாடங்கள் பயிற்றுவித்தல் முறையிலும் மாற்றம் தேவைப்படுகிறது. புதிய உத்திகளும், நவீனப் பயிற்சி முறைகளும் பாடம் கற்பித்தலில் இடம்பெற வேண்டும். பங்கேற்புப் பயிற்சிமுறைகளை அதிகம் கையாளலாம்.

முறைசாராக் கல்வியில் உள்ளதுபோன்று பாடத்திட்டங்கள் உள்ளூர் விவரங்களை அதிகம் கொண்டதாக அமைக்கலாம்.

அனைத்துப் பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் அவசியம் ஏற்படுத்தப்படவேண்டும். இவைகள் மாணவர்களின் பிரச்சனைகளை உடனுக்குடன் பேசித்தீர்க்கவும் இடைவிலகலைக் குறைக்கவும் உதவிபுரியும்.

ஆசிரியர்களுக்கு அவ்வப்போது புத்தொளிப் பயிற்சி வகுப்புகளை நடத்தினால் அவர்களுக்குப் புதிய செய்திகள் தெரியவும், நவீனப் பயிற்சி முறைகளை அறியவும் உதவியாக இருக்கும்

கல்வியில் மந்தமாக உள்ள குழந்தைகளுக்குத் தனியாக ஆசிரியர்கள் கவனம் செலுத்திப் பயிற்சியளிக்கவேண்டும்.

பள்ளிகளில் நூலக வசதி, கழிப்பிட வசதி, கட்டிட வசதி போன்றவைகள் விரிவுபடுத்தப்படவேண்டும்.

தேவைக்கு ஏற்பப் பள்ளிகளின் நேரங்களையும் மாற்றியமைக்கலாம்.

முதியோர் கல்விக்கு அதிகமாக விளம்பரம் செய்வதுபோன்று பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கும் அதிக விளம்பரங்கள் அனைத்து முறைகளிலும் செய்யவேண்டும்.

துணை நூற் பட்டியல்

1. எல்லோருக்கும் கல்வி, மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலம், சென்னை-20, அக்டோபர், 1993.

2. வறுமையும் எழுத்தறிவும், ஆதிசேசையா, மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூல வெளியீடு, சென்னை-20, செப்டம்பர், 1990,

3. பகல் கனவு, கிஜுபாய் பகேக, சவுத ஆசியன் புக்ஸ் வெளியீடு, சென்னை-2, 1993.

4. தமிழக அரசு கல்வித்துறை புள்ளிவிவர அறிக்கை, பள்ளிக் கல்வித்துறை, சென்னை, 1990 - 91.

5. தமிழக அரசின் கல்வித்துறை அறிக்கை, சென்னை, 1995.

6. கல்வித் தகவல்கள், தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், 1993-94.

7. ஆண்டு நிதி அறிக்கை, தஞ்சாவூர் மாவட்ட முன்னோடி வங்கி (இந்தியன் ஓவர்சிஸ் வங்கி), 1993 - 94.

8. மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கில் (18796) தமிழ்ப் பல்கலைக்ககழகத்தில் அனைவருக்கும் கல்வி' எனும் தலைப்பில் உரு. கனகராசன் உரை.

9. Issues in Education, Venkata Subramanian, K., Macmillan India Limited, Madras -2. 1982

10. The Out of school Youth, V.E. Reddy & K.S. Bhat, Sterling publishers Pvt. Ltd., New Delhi, 1977.

11. Marching Ahead - 15 Years in the cause of Adult / Non Formal Education, Souvenir, State Resource Centre, Madras - 20, 1992.

12. Drop-out problem in Education, Vashist P.D, Yojana, November 1-15, 1989.

13. Reason for Drop-out more Academic, Joseph Maliakhan, IAEA Newsletter, Vol.XVIII, No.1, April, 1996.

பிற்சேர்க்கை-1

பள்ளி மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்கள் - தஞ்சை மாவட்டத்தில் ஓர் ஆய்வு

வினாப்பட்டியல் (Questionnaire)
(பள்ளி விவரங்களுக்கானது)

1. பள்ளியின் பெயர் மற்றும் முகவரி :

2. பள்ளியின் வகை : *1.* அரசுப்பள்ளி/அரசு உதவிபெறும் பள்ளி/ஆதிதிராவிடப்பள்ளி
2. தொடக்கப்பள்ளி/நடுநிலைப்பள்ளி
3. ஆண்/பெண்/இருபாலரும்

3. பள்ளி தொடங்கிய ஆண்டு :

4. பள்ளியில் மாணவர் எண்ணிக்கை : ஆண் பெண் கூடுதல்

5. பள்ளியில் அலுவலர் எண்ணிக்கை :
ஆசிரியர்கள் :
ஆசிரியர் அல்லாதோர் :
மொத்தம் :

6. பள்ளியிலுள்ள சலுகைத்திட்டம் யாவை?
1. இலவச சீருடை வழங்குதல் ( )
2. இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல் ( )
3. மதிய உணவு ( )
4. இலவச காலணித்திட்டம் ( )
5. மற்றவை (குறிப்பிடவும்) ( )

7. கடந்த இரண்டு ஆண்டுகளில்

பள்ளியில் சேர்ந்த மாணவர்கள்,
விடுபட்ட மாணவர்கள் விபரம்
அளிக்கவும்
(விடுபட்ட மாணவர்களது முகவரியைத்
தனிச்சீட்டில் குறிப்பிடவும்)

வகுப்பு	பால்	சேர்ந்தவர்	விலகியவர்
1.	ஆண் பெண்		
2.	ஆண் பெண்		
3.	ஆண் பெண்		
4.	ஆண் பெண்		
5.	ஆண் பெண்		
6.	ஆண் பெண்		
7.	ஆண் பெண்		
8.	ஆண் பெண்		

8. பள்ளியிலிருந்து நின்ற மாணவர்கள்
மீண்டும் பள்ளிக்குத் தொடர்ந்துவர என்ன
முயற்சி மேற்கொள்ளப்பட்டது?

1.

2.

3.

9. பள்ளியில் செய்துதரப்பட்டுள்ள வசதிகள் யாவை?

1. விளையாட்டு மைதானம் ( )
2. நூலகம் / படிப்பறை ( )
3. ஆய்வுக்கூடம் ( )
4. மற்றவை (குறிப்பிடவும்) ( )

10. பாடம் தவிர்த்து பள்ளியில் மாணவர்களுக்கு நடத்தும் நிகழ்ச்சிகள் யாவை?

1. சமூக சேவைப் பணிகள் ( )
2. விழா கொண்டாடுதல் ( )
3. கலை நிகழ்ச்சிகள் ( )
4. மாணவர்களிடையே பேச்சு, விளையாட்டுப் போட்டி போன்றவை ( )
5. மற்றவை (குறிப்பிடவும்) ( )

11. மற்ற விபரங்கள்

பிற்சேர்க்கை - 2

பள்ளி மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்கள்
தஞ்சை மாவட்டத்தில் ஓர் ஆய்வு

நேர்காணல் பட்டியல்
(Interview Schedule)

(இடைவிலகிய மாணவர்களுக்கானது)

அ. **தகவாளியின் சொந்த மற்றும் குடும்ப விவரம்**

1. பெயர் : ஆண் / பெண்
2. தந்தை/பாதுகாவலர் பெயர் :
3. முகவரி :
4. இறுதியாகப் படித்த பள்ளியின் பெயர் :
5. படித்த வகுப்பு :
6. வயது :
7. மதம் :
8. சாதி :
9. குடும்ப ஆண்டுவருமானம் :ரூ.
10. குடும்ப வகை :தனிக்குடும்பம்/கூட்டுக்குடும்பம்
11. குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை : ஆண் :
பெண் :
மொத்தம்

12. பெற்றோரது கல்விநிலை :

13. பெற்றோரது தொழில் :

ஆ. பள்ளியை விட்டு விலகியதற்கான காரணங்களைக்குறிப்பிடவும்

1. பொருளாதாரக் காரணங்கள் ( )
(குறைந்த வருமானம், வருமானத்திற்காக வேலைக்குச் செல்லுதல்)

2. பள்ளிப் படிப்பில் ஆர்வமின்மை ( )
(படிப்பில் ஆர்வமின்மை, வகுப்பில் தோல்வி, பாடங்களை விரும்பாமை)

3. உடல் நலக் குறைவு ( )
(ஊனம் உள்ளிட்டது)

4. பள்ளிக்குச் செல்லப் பெற்றோர் ஊக்கமளியாமை ( )

5. இளைய குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுதல் ( )

6. பெற்றோர்க்கு உதவியாக இருத்தல் ( )

7. உறைவிடம் மாற்றப்படுதல் ( )

8. மற்ற காரணங்கள் (குறிப்பிடவும்) ( )

இ. இடைவிலகும் மாணவர்களின் கல்வி உணர்வுகள்

1. கல்வியின் பயன்கள் தெரியுமா? ஆம் / இல்லை

2. ஆம், எனில் கல்வியின பயன்கள் எவை?

   1. வேலை வாய்ப்பு ஏற்படும் ( )

   2. சமூக அந்தஸ்து உயரும் ( )

   3. அறிவை வளர்க்க உதவும் ( )

   4. மற்றவை (குறிப்பிடவும்) ( )

3. தாங்கள், தற்போது வாய்ப்பு கிடைத்தால் படிக்க விரும்புகிறீர்களா? ஆம்/இல்லை

4. ஆம் எனில், எம்மாதிரியான முறையில் தாங்கள் படிக்க விரும்புகிறீர்கள்?

1. பள்ளிகள் ( )

2. முதியோர்கல்வி நிலையம் ( )

3. தனியாரிடம் கற்றல் ( )

ஈ. மற்ற செய்திகள் (குறிப்பிடவும்)